بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 8

இதழ் 15

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ரமலான் 21 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - ஷஹாதத் 13 ★ 13 ஏப்ரல் 2023


## அல்லாஹ்வின் கட்டளை

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ
هُدًی لِّلنَّاسِ وَبَیِّنٰتٍ مِّنَ الۡهُدٰی وَالۡفُرۡقَانِ ۚ
فَمَنۡ شَهِدَ مِنۡكُمُ الشَّهۡرَ فَلۡیَصُمۡهُ

**பொருள் :**

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும். திருகுர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழிக் காட்டக்கூடியதும், நேர்வழியைத் தெளிவாக்கக்கூடியதும் (நன்மை,தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும்.

(அல்பக்கரா : 186)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا كُتِبَ عَلَيۡکُمُ الصِّيَامُ

**நம்பிக்கை கொண்ட மக்களே! உங்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது**

وَاَنۡ تَصُوۡمُوۡا خَيۡرٌ لَّـكُمۡ اِنۡ كُنۡتُمۡ تَعۡلَمُوۡنَ

**நீங்கள் அறிவுடையவர் என்றால் நோன்பு நோற்பது உங்களுக்குச் சிறந்தது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இந்த (ரமலான்) மாதம் உள்ளத்தை ஒளிமயமாக்குவதற்கு சிறந்த மாதம் ஆகும் என்று சூஃபிமார்கள் எழுதியுள்ளனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

"شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ"

(2:186) என்ற வசனத்திலிருந்து ரமலான் மாதத்தின் மகத்துவம் தெரிய வருகின்றது. இந்த (ரமலான்) மாதம் உள்ளத்தை ஒளிமயமாக்குவதற்கு சிறந்த மாதம் ஆகும் என்றும், இதில் அதிகமான ஆன்மிகக் காட்சிகள் கிடைக்கின்றன என்றும் சூஃபிமார்கள் எழுதியுள்ளனர். தொழுகை உள்ளத்தை தூய்மைப்படுத்துகின்றது. நோன்பு உள்ளத்தை ஒளிமயமாக்குகின்றது. உளத் தூய்மை என்பதன் பொருள் நஃப்ஸே அமாரா எனும் தீமையின் பக்கம் சாய்க்கும் ஆன்மாவின் விருப்பங்களிலிருந்து விலகுவது ஆகும். உள்ளத்தை ஒளிமயமாக்குதல் என்பது இறைவனை காணும் வகையில் அவர் மீது ஆன்மிகக் காட்சிக்கான வாசல் திறப்பது என்பதாகும். எனவே, اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ (2:186) என்பதில் இந்தக் கருத்தே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நோன்பிற்கு மாபெரும் நற்கூலி உள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும், ஐயமுமில்லை. ஆனால் நோய்களும், நோக்கங்களும் மனிதனை இந்த அருட்கொடையிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆக்கிவிடுகின்றன. எனக்கு நினைவு உள்ளது.அதாவது இளமையின் நாட்களில் நான் ஒரு முறை கனவில் இவ்வாறு கண்டேன். நோன்பு நோற்பது அஹ்லே பைத்தின் சுன்னத் ஆகும். سَلۡمَانُ مِنَّا اَهۡلَ الۡبَيۡتِ என்று எனக்கு ஆதரவாக இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஸல்மான் அதாவது, அவர் اَلصُّلۡحَانُ ஆவார். அதாவது அந்த நபரின் கரத்தால் இரண்டு சமாதானம் நிகழும். ஒன்று உள்ளே. மற்றொன்று வெளியே. அவர் தனது பணியை மென்மையுடன் செய்வாரே தவிர வாளால் அல்ல.

போர் புரிந்த ஹுஸைனின் வழிமுறையில் நான் இல்லை. மாறாக, நான் போர் புரியாத ஹஸனின் வழிமுறையில் உள்ளேன். ஆக, நோன்பின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்பதை நான் புரிந்து கொண்டேன். எனவே நான் ஆறு மாதம் வரை நோன்பு நோற்றேன். இந்த நாட்களில் நான் கண்டேன்; ஒளிகளின் ஏராளமான தூண்கள் விண்ணை நோக்கி செல்கின்றன. ஒளிகளின் தூண்கள் பூமியிலிருந்து விண்ணிற்கு சென்றனவா அல்லது எனது இதயத்திலிருந்து சென்றனவா என்ற விஷயம் ஐயத்திற்குரியதாகும். அந்த நேரத்தில் நான் விரும்பியிருந்தால் நான்கு ஆண்டுகள் வரை கூட நோன்பு நோற்றிருக்க முடியும்.

தற்போது நாற்பது வயது கழிந்ததிலிருந்து நான் பார்க்கின்றேன். அந்த விஷயம் (தற்போது) இல்லை. முதலில் நான் பட்டாலா வரை பல முறை நடந்தே செல்வேன். நடந்தே வருவேன். எந்த சோம்பலும், பலவீனமும் எனக்கு ஏற்பட்டதில்லை. தற்போது நான் ஐந்து மைல் தொலைவு சென்றால் கூட எனக்கு துன்பம் ஏற்படுகின்றது. நாற்பது வயதிற்கு பிறகு (உடலின் இயற்கையான) வெப்ப உள்ளுணர்வு குறைய தொடங்கிவிடுகின்றது. இரத்தம் குறைவாக உருவாகின்றது. மேலும் மனிதனின் மீது பல துன்பங்களும், சோதனைகளும், கஷ்டங்களும் கடந்து செல்கின்றன. பசியை தணிப்பதற்கு அதிக காலதாமதம் ஆகிவிட்டால் இயல்பில் நிம்மதியின்மை ஏற்படுவதை தற்போது பல முறை பார்க்கப்பட்டுள்ளது.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 561, பதிப்பு- காதியான் 2003)

* * * * *

## நபிமொழி

**நோன்பு கேடயமாகும்**

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

மனிதனின் அனைத்து செயல்களும் அவனுக்கானது ஆகும். ஆனால் நோன்பு எனக்குரியதாகும். மேலும் அதற்குரிய நற்கூலி நான் ஆவேன் என்று அல்லாஹ் கூறியதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் கூறினார்கள். அதாவது, அவரது இந்த நன்மைக்கு பகரமாக நான் எனது சந்திப்பை அவருக்கு வழங்குவேன். நோன்பு கேடயம் ஆகும் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே உங்களில் ஒருவர் நோன்பு நோற்கும்போது அவர் எந்த வீணான பேச்சுக்களையும் பேச வேண்டாம். கூச்சலும், தீங்கும் இழைக்க வேண்டாம். ஒருவேளை எவராவது ஒருவர் அவரை ஏசிபேசினால் அல்லது சண்டையிட்டால் நான் நோன்பு நோற்றுள்ளேன் என்று அவருக்கு பதில் அளிக்கட்டும். எந்த இறைவனின் கையில் முஹம்மது (ஸல்) அவர்களின் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நோன்பாளியின் வாய் துர்நாற்றம் அல்லாஹ்வின் பார்வையில் கஸ்தூரியை விட மிகவும் தூய்மையானதும் நறுமணம் மிக்கதும் ஆகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒன்று, அவர் நோன் திறக்கும் அந்த நேரத்தில் ஏற்படுகின்றது. இரண்டாவது மகிழ்ச்சி, நோன்பின் காரணமாக அவருக்கு அல்லாஹ்வின் சந்திப்பு கிடைக்கும்போது ஏற்படுகின்றது.

(ஸஹீஹ் புகாரி, பாடம் நோன்பு, நூல் -ஹதீக்கத்துஸ் ஸாலிஹீன், ஹதீஸ் எண்- 268, நூலாசிரியர்: மதிப்பிற்குரிய மலிக் ஸைஃபுர் ரஹ்மான் ஸாஹிப்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**எந்த விஷயங்கள் மீது கிறித்தவர்கள் பெருமிதம் கொள்கிறார்களோ அந்த உண்மைகள் அனைத்தும் நிரந்தரமான முறையிலும், முற்றிலும் நிறைவான முறையிலும் திருக்குர்ஆனில் இருக்கின்றன**

**ஹதீஸ் தீர்ப்பளிக்கக்கூடியதல்ல. மாறாக, திருக்குர்ஆன் அதன் மீது நீதிபதியாக உள்ளது. தீர்ப்பளிப்பது திருக்குர்ஆனின் பணியாகும் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**திருக்குர்ஆனில் இறங்கிய இறைக் கட்டளைகளை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செயல்முறையாக செய்தும், செய்ய வைத்தும் காட்டியுள்ளார்கள். மேலும், ஒரு முன்மாதிரியை நிலைநாட்டி விட்டார்கள். இந்த முன்மாதிரி இல்லாமல் இருந்திருந்தால் இஸ்லாத்தைப் புரிய முடியாது. ஆனால், திருக்குர்ஆன் அசலாகும்**

**திருக்குர்ஆன் அற்புதமாவது, அதில் எல்லாச் சொற்களும் முத்துக்களைப் போன்று கோர்க்கப்பட்டுள்ளன. தமக்கான இடத்தில் பொருத்தப்பட்டுள்ளன. எதையும் ஓரிடத்தில் இருந்து எடுத்து வேறு இடத்தில் வைக்க முடியாது. எதையும் வேறு சொற்களைக் கொண்டு மாற்ற முடியாது. ஆனால், அவ்வாறு இருந்தும், அதனுடைய எதுகை, மோனை, சொற்செறிவு மற்றும் சொல்லாட்சி ஆகியவற்றின் இன்றியமையாதவை அதில் இருக்கின்றன (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**இப்பொழுது வேறு எந்த ஒரு மார்க்கமும் இப்படிப்பட்டதாக இருக்கவில்லை. அதாவது, அதைப் பின்பற்றக்கூடியவர் அ(ந்)த (மார்க்கத்தி)னால் முன்னறிவிப்புகளை செய்ய முடியும் என்றோ அல்லது அதனிடம் அற்புதங்கள் வெளிப்படுகின்றன என்றோ வாதிக்க முடியாது. எனவே, இந்தக் கோணத்தில் எல்லா வேத நூல்களின் அற்புதத்தைக் காட்டிலும் திருக்குர்ஆனின் அற்புதம் மேலோங்கியுள்ளது (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**மிகவும் எளிமையான வழிமுறையாகும். செய்ய வேண்டிய கட்டளைகள், வெளிப்படையாக உங்களுக்குத் தென்படக்கூடியவை அவற்றின் படி செயல்படுங்கள். எவற்றிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். இதன் மூலமாகவே இறைவன் மகிழ்ச்சி அடைந்து விடுவான்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 மார்ச் 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **அமான்** மாதம் **10ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றைய நாட்களில் திருக்குர்ஆனின் அழகை, அதன் சிறப்புகளை குத்பாக்களில் நான் எடுத்துரைத்து வருகின்றேன். அதன் அழகையும் சிறப்புகளையும் எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் முழுமையான மறையாகும் என்பதை விளக்கியவாறு ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் எந்த அளவு முழுமையான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வேதம் என்றால், எந்த வேதமும் இத்துடன் போட்டி போட முடியாது என்று நான் உண்மையாகவே கூறுகின்றேன். அன்னார் (அலை) உதாரணம் வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

هُدًى لِّلْمُتَّقِيْنَ என்ற வசனத்துடன் போட்டியிடக்கூடிய ஒரு ஸ்லோகமாவது வேதங்களில் உள்ளதா? நாவால் ஒப்புக் கொள்வது ஒரு விஷயம் என்றால், அதாவது, அதன் கனிகளும், விளைவுகளும் தேவையில்லை என்றால், பின்னர் முழு உலகமும் ஏதாவது ஒருவகையில் இறைவன் இருக்கின்றான் என்று ஒப்புக் கொள்கிறது. மேலும் பக்தி, இறைவணக்கம் மற்றும் தான தர்மங்கள் ஆகியவற்றையும் நல்லவையாகக் கருதுகிறது. ஏதாவது ஒருவகையில் இந்த விஷயங்களின்படி செயல்படவும் செய்கிறது. பிறகு, வேதங்கள் வந்து உலகிற்கு என்ன கொடுத்தன?

இதுவரை இந்துக்களுக்கு இவ்வாறு பதில் கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஒன்று, வேதங்களை ஏற்காத சமுதாயங்களிடத்தில் நன்மைகள் முற்றிலுமே இல்லை என்று நிரூபித்துக் காட்டுங்கள் அல்லது ஏதாவது தனிச்சிறப்பான அடையாளத்தைக் காட்டுங்கள். அன்னார் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனை ஆரம்பித்த இடத்திலேயே இயல்பாகவே ஆன்மா எதிர்பார்க்கக் கூடிய அந்த முன்னேற்றங்கள் குறித்த வாக்குறுதியை அளித்துவிட்டான். ஆக, சூரா ஃபாத்திஹாவில் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற போதனையை வழங்கியுள்ளான். மேலும் இவ்வாறு கூறுகின்றான்: அல்லாஹ்வே! எங்களை நேரான பாதையில் செலுத்துவாயாக என்று துஆ செய்யுங்கள். இந்த துஆவையும் வழங்கினான். மேலும், நேர்வழி காட்டுவதற்கான துஆவைக் கற்றுக் கொடுத்துள்ளான் எனும்போது அதற்கு அர்த்தம், நான் நேரான பாதையில் செலுத்துவேன் என்று வாக்குறுதியும் அளித்துவிட்டான் என்பதாகும்.

பின்னர் கூறுகின்றான்: அந்த நேரான பாதை என்பது எவர்கள் மீது உனது அருளும், கருணையும் உண்டானதோ அவர்களின் பாதையாகும். இந்த துஆவுடன் சேர்த்தே, சூரா அல்பக்கராவின் முதல் வசனத்திலேயே

ذٰلِكَ الْكِتٰبُ لَا رَيْبَ فِيْهِ هُدًى لِّلْمُتَّقِيْنَ

என்று நற்செய்தி வழங்கிவிட்டான். நேர்வழிக்கான துஆவைக் கற்றுக் கொடுத்துள்ளான் என்றால், அதைப் பெறுவதற்கான ஒரு செயல் திட்டத்தையும் கூறிவிட்டான். அதாவது, இந்த இறைமறையின்படி செயல்படுங்கள். இதன்படி செயல்படுவதன் மூலமாக இறையச்சம் உடையவர்களான உங்களுக்கு நேர்வழி கிடைக்கும். ஆக, ஒரு வகையில் ஆன்மாக்கள் துஆ செய்கின்றன. அத்துடன் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் என்பது தனது தாக்கத்தை காட்டுகின்றது.

மேலும் துஆ ஏற்றுக் கொள்ளப்படும் என்ற அந்த வாக்குறுதி திருக்குர்ஆன் இறங்கிய வடிவில் நிறைவேறுகிறது. ஒருபுறம் துஆ உள்ளது. மறுபுறம் அதன் விளைவு உள்ளது. இது அல்லாஹ் செய்துள்ள அருளும், கருணையும் ஆகும். ஆனால், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் உலகம் இதை அறியாமல் கவனமற்று இருக்கின்றது. மேலும், இதை விட்டும் விலகியிருந்து அழிந்து போகிறது.

பின்னர் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் மீண்டும் கூறுகின்றேன். இறைவன் திருக்குர்ஆனின் ஆரம்பத்தில் இறையச்சம் உடையவர்களின் பண்புகளை எடுத்துக் கூறியுள்ளான். அவற்றை சாதாரண பண்புகளில் வைத்துள்ளான். ஆனால், மனிதன் திருக்குர்ஆன் மீது ஈமான் கொண்டு அதைத் தனது நேர்வழிக்கான நடைமுறைச் சட்டமாக ஆக்கும்போது, அவன் هُدًى لِّلْمُتَّقِيْنَ என்ற வசனத்தின் நோக்கமாக வைக்கப்பட்டுள்ள நேர்வழிக்கான அந்த உயர்ப்படித்தரங்களையும் அந்தஸ்தையும் பெற்றுவிடுகின்றான். திருக்குர்ஆனின் இந்த அசல் நோக்கத்தை எண்ணி எத்தகைய இன்பமும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது என்றால், அதை நம்மால் சொற்களில் விவரிக்க முடியாது. ஏனென்றால், அதன் மூலம் இறைவனின் சிறப்பான அருளும் திருக்குர்ஆனின் உன்னதமும் தெரிய வருகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 317-318, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

அடுத்து, திருக்குர்ஆனின் போதனை ஒரு முழுமையான போதனை என்ற விஷயத்தை விளக்கி கூறியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அந்தக் காலம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகையின் தேவைக்கு மற்றோர் ஆதாரமாகும். மேலும், விளைவு என்ன ஆனது என்பதை اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ என்ற வசனத்தில் அல்லாஹ் கூறிவிட்டான். அதாவது அந்தக் காலமானது, அப்போது உலகில் இருந்த சூழ்நிலையானது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகைக்கு ஆதாரமாகும். ஏனெனில், அப்போது தேவை இருந்தது. பிறகு, அந்த வருகையின் விளைவு என்ன ஆனது? போதனை எவ்வாறு முழுமை அடைந்தது என்பதை اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ

என்ற வசனத்தில் அல்லாஹ் கூறிவிட்டான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருவகையில், இது நபித்துவம் எனும் அத்தியாயத்தின் இரண்டாவது உட்பிரிவு ஆகும். இக்மால் என்பதன் பொருள் அதிகாரங்களை இறக்கிவிட்டான் என்பது மட்டுமல்ல ; அதற்கும் மேற்பட்டு உள்ளத்தை முழுமை படுத்தவும், தூய்மைப்படுத்தவும் செய்துள்ளான் என்பதாகும். திருக்குர்ஆனை இறக்கிவிட்டான் அல்லது போதனைகளை வழங்கிவிட்டான். மறையை இறக்கிவிட்டான் என்பது மட்டுமே சிறப்பு அல்ல. மாறாக, சிறப்பு என்னவென்றால், மனிதனின் ஆன்ம நிலையையும் முழுமைபடுத்தி விட்டான். அமல் செய்பவர்களை முழுமையான மனிதர்களாக்கி விட்டான். அவர்களின் உள்ளங்களைத் தூய்மையாக்கி விட்டான். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: காட்டுமிராண்டிகளை மனிதர்களாகவும், அதற்குப் பிறகு புத்திசாலிகளாகவும், நல்லொழுக்கம் மிக்க மனிதர்களாகவும், பின்னர் இறைஅடியார்களாகவும் ஆக்கிவிட்டான். பின்னர், உள்ளத்தைத் தூய்மைபடுத்தினான். மேலும், மனதை முழுமையாகத் தூய்மைப்படுத்திவிட்டான். மேலும், உள்ளம் பண்படுவதற்கான படித்தரங்களைக் கடக்கச் செய்தான். பண்பாடு மற்றும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்கான உயர்படித்தரங்களையும் அளவற்ற முறையில் மனிதனுக்குக் கற்றுக் கொடுத்துவிட்டான். மேலும், இவ்வாறே இறைமறையையும் நிறைவடையச் செய்துவிட்டான். முழுமைப்படுத்திவிட்டான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எதுவரை என்றால், திருக்குர்ஆனில் இல்லாத எந்தவொரு உண்மையும், சத்தியமும் இல்லை. நான் அக்னீ ஹோத்தரீயிடம் பலமுறை கூறினேன்.

இவர் இந்துக்களின் மத அமைப்பின் ஒரு தோற்றுநராக இருந்தவர் ஆவார்.முதலில் ஒரு பிரிவில் இருந்தார். பின்னர் அவர் தனக்கென ஒரு பிரிவை அல்லது அமைப்பை ஆரம்பித்தார்.

எவ்வாறு இருப்பினும், அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் பல விவாதங்கள் செய்து வந்தார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனில் இல்லாத ஓர் உண்மையை எடுத்துக் கூறுங்களேன் என்று நான் அவரிடம் பன்முறை கூறினேன். ஆனால், அவரால் கூறமுடியவில்லை. இவ்வாறே, என் மீது ஒரு காலம் வந்தது. அப்போது நான் பைபுளை முன்னால் வைத்துப் பார்த்தேன். எந்த விஷயங்கள் மீது கிறித்தவர்கள் பெருமிதம் கொள்கிறார்களோ அந்த உண்மைகள் அனைத்தும் நிரந்தரமான முறையிலும், முற்றிலும் நிறைவான முறையிலும் திருக்குர்ஆனில் இருக்கின்றன. ஆனால், முஸ்லிம்களின் கவனம் அதன் பக்கம் இல்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம் ஆகும். அவர்கள் திருக்குர்ஆனை ஆழ்ந்து சிந்திப்பதே இல்லை. அவர்களின் உள்ளத்தில் எந்த ஒரு மகத்துவமும் இல்லை. இல்லையென்றால், இது எத்தகைய பெருமிதத்திற்குரிய இடம் என்றால் இதற்கு நிகர் மற்றவர்களிடம் இல்லவே இல்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ

(இன்று நான் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளேன்) என்ற வசனம் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. ஒன்று, நான் உங்களைத் தூய்மைப்படுத்திவிட்டேன். இரண்டாவது, மறையை முழுமைப்படுத்திவிட்டேன்.

முழுமையான ஷரீஅத்தை உங்கள் மீது இறக்கியுள்ளான். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த வசனம் இறங்கிய நாள் வெள்ளிக்கிழமையாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு யூதர் இந்த வசனம் இறங்கிய நாளை பெருநாளாகக் கொண்டாடியிருக்க வேண்டுமே! என்று கூறினார்.

எந்த அளவு முழுமையான மற்றும் தாக்கத்தைக் கொண்டுள்ள வசனம் என்றால், மகிழ்ச்சியில் அந்த நாள் பெருநாளாக இருந்திருக்க வேண்டுமே!

இதை அந்த யூதர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெள்ளிக்கிழமை பெருநாள் தான் என்று கூறினார்கள்.

இந்த வசனம் வெள்ளிக்கிழமை அன்று இறங்கியது. ஜுமுஆ பெருநாள் தான். ஆனால், பெரும்பாலான மக்கள் இந்தப் பெருநாளை அறியாதவர்களாக உள்ளனர். பிற பெருநாள்களில் ஆடையை மாற்றுகிறார்கள். ஆனால், இந்தப் பெருநாளைப் பொருட்படுத்தாமல் அழுக்கான பழைய ஆடைகளை அணிந்து வருகின்றார்கள். அன்னார் ஜுமுஆ தொழுவது எவ்வளவு அவசியமானது என்று ஜுமுஆவின் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள். அன்னார் (அலை)கூறுகின்றார்கள்:

எனது பார்வையில் இந்தப் பெருநாள் பிற பெருநாள்களை விடச் சிறந்ததாகும். அதாவது ஜுமுஆ அன்றும் சிறப்பான ஏற்பாடு இருக்க வேண்டும். ஜுமுஆவில் கலந்து கொள்வதற்கான சிறப்பான ஏற்பாடும் இருக்க வேண்டும். ஓராண்டுக்குப் பிறகு, பெருநாள் தொழுவது மட்டும் இருக்கக் கூடாது.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: இந்தப் பெருநாளுக்காகவே சூரா ஜுமுஆ இறங்கியுள்ளது. இதற்காகத் தான் தொழுகை கஸ்ர் செய்யப்படுகின்றது. வெள்ளிக்கிழமையின் அஸ்ர் நேரத்தில் ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் பிறந்தார்கள். முதல் மனிதன் இந்தப் பெருநாளில் பிறந்தான் என்று இந்தப் பெருநாள் அந்தக் காலத்தையும் குறிக்கிறது. திருக்குர்ஆனும் இந்த நாளில்தான் முழுமை பெற்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 399, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

பின்னர் திருக்குர்ஆன் ஹதீஸ் மீது நீதிபதியாக உள்ளது என்பதை விளக்கிவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இன்னொரு தவறு பெரும்பாலான முஸ்லிம்கள் மத்தியில் இருக்கிறது. அவர்கள் திருக்குர்ஆனைக் காட்டிலும் ஹதீஸுக்கு முன்னுரிமை அளிக்கின்றார்கள். ஆனால், அது தவறாகும். திருக்குர்ஆன் ஓர் உறுதியான தரத்தைக் கொண்டுள்ளது.

ஹதீஸின் அந்தஸ்து எண்ணத்தின் அடிப்படையிலானதாகும். திருக்குர்ஆனின் போதனையோ ஓர் உறுதியான போதனையாகும். ஆனால், ஹதீஸை நம்மால் உறுதியானது என்று கூறமுடியாது. அதுவோ பின்னால் சேகரிக்கப்பட்ட பல அறிவிப்புகளாகும். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஹதீஸ் தீர்ப்பளிக்கக்கூடியதல்ல. மாறாக, திருக்குர்ஆன் அதன் மீது நீதிபதியாக உள்ளது. தீர்ப்பளிப்பது திருக்குர்ஆனின் பணியாகும். எனினும், ஹதீஸ் திருக்குர்ஆனுக்கு விளக்கவுரையாகும். பல ஹதீஸ்களில் இருந்து இந்த வசனங்களுக்கு விளக்கம் கிடைத்து விடுகிறது. அதை அதற்கான தரத்தில் வைக்க வேண்டும். ஹதீஸ் திருக்குர்ஆனுக்கு எதிராக ஆகாத அளவுக்கு அதற்கு ஏற்ப இருக்கும் அளவிற்கு ஹதீஸை ஏற்பது அவசியம் ஆகும். ஆனால், அதற்கு மாற்றமாக இருந்தால், அது ஹதீஸ் அல்ல. மாறாக, நிராகரிக்கப்பட்ட கூற்றாகும். எனினும், திருக்குர்ஆனைப் புரிவதற்கு ஹதீஸ் அவசியமானதாகும்.

ஆனால், அத்துடன் இதையும் நினைவிற் கொள்ளுங்கள். ஹதீஸ்களில் பல ஹதீஸ்கள் எத்தகையவை எனில், அவற்றால் சில வசனங்களுக்கு விளக்கம் கிடைக்கின்றது. அவை சான்றோர்களான ஸஹாபா பெருமக்களின் அறிவிப்புகளாகும். எனவே, அதைப் புரியவும் வேண்டும். ஆனால், ஹதீஸ் திருக்குர்ஆனுக்கு எதிராக இருக்கக் கூடாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: திருக்குர்ஆனில் இறங்கிய இறைக் கட்டளைகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செயல்முறையாக செய்தும், செய்ய வைத்தும் காட்டியுள்ளார்கள். மேலும், ஒரு முன்மாதிரியை நிலைநாட்டி விட்டார்கள். இந்த முன்மாதிரி இல்லாமல் இருந்திருந்தால்

இஸ்லாத்தைப் புரிய முடியாது. எனினும் திருக்குர்ஆன் அசலாகும்.

ஆன்மிகக் காட்சி காண்பவர்கள் சிலர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாக எத்தகைய ஹதீஸ்களைக் கேட்டறிந்துள்ளார்கள் என்றால், அவை மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை அல்லது தற்போதுள்ள ஹதீஸ்களை உண்மைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 363-364, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மைப் பற்றியும் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

நானும் சில ஹதீஸ்களை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து நேரடியாகக் கேட்டறிந்துள்ளேன். (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 1,பாகம் 3,பக்கம் 550, அறிவிப்பு எண்: 572)

பிறகு, திருக்குர்ஆனின் சொல்வன்மை பற்றி எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் தன்னுடைய சொற்றொடர்களில் எந்த அளவு சொல்வன்மை உடையதாகவும், இடத்திற்குத் தகுந்த சொற்களைக் கொண்டதாகவும், உன்னதமானதாகவும், மென்மையானதாகவும், பொலிவை கொண்டதாகவும் இருக்கின்றது என்றால், (உதாரணமாக) இஸ்லாத்திற்குக் கடுமையான எதிரியான மிகவும் தலைக்கணம் கொண்ட குறை கூறும் ஒருவன் அரபு மொழியின் இலக்கியங்களை சரியாக எழுதுவதில் முழுமையான தேர்ச்சி பெற்றவனாக இருக்கின்றான். அவனுக்கு அதிகாரம் படைத்த ஆளுநர் தரப்பிலிருந்து இவ்வாறு ஒரு கட்டளை பிறப்பிக்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம்.

அதாவது உதாரணமாக நீ 20 ஆண்டுகளில், (இது ஆயுளின்) ஒரு (நீண்ட) காலம் ஆகும். அதில் திருக்குர்ஆனின் ஏதாவது ஒரு இடத்திலிருந்து வெறும் 3,4 வரிகளைக் கொண்ட ஒரு கருத்தை எடுத்துக் கொண்டு அதற்கு நிகரான அல்லது அதைவிடச் சிறந்த ஒரு புதிய வாசகத்தைத் தயாரித்துக் கொண்டு வர வேண்டும். அதில் அந்தக் கருத்துகள் அனைத்தும் தனது அறிவாழங்கள் மற்றும் உண்மைகளைக் கொண்டவாறு வந்துவிட வேண்டும்.

சொற்றொடரும், திருக்குர்ஆனில் இருப்பதைப் போன்று சொற்செறிவும் சொல்வன்மையும் மிக்கதாக இருக்க வேண்டும். அவ்வாறு திருக்குர்ஆனுக்கு நிகரானதை அவரால் முன்வைக்க முடியவில்லை என்றால் அதை செய்ய முடியாத காரணத்தினால் அவருக்கு மரணத் தண்டனை வழங்கப்படும் என்று கட்டளை இடப்படுவதாக வைத்துக் கொள்வோம். பிறகும் கூட கடுமையான எதிரியாக இருந்தாலும், இழிவடைந்து விடுவோமே மரணித்து விடுவோமே என்ற அச்சத்தினால் கூட அவரால் ஒருபோதும் திருக்குர்ஆனுக்கு நிகரானதைக் கொண்டு வர முடியாது. அதற்காக அவர் உலகத்தின் நூற்றுக் கணக்கான மொழி அறிஞர்களையும் இலக்கிய புலமை பெற்றவர்களையும் தனக்கு உதவியாளர்களாக ஆக்கிக் கொண்டாலும் சரியே! (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானீ கஸாயீன் தொகுதி 1, பக்கம் 286 - 287)

இப்போது ஒரு பக்கம் அவருக்கு அச்சம் இருக்கும். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆனைப் போன்ற ஒன்றைத் தயாரித்துக் கொண்டு வா! சில வசனங்களையாவது தயாரித்துக் கொண்டு வா! சில வரிகளையாவது தயாரித்துக் கொண்டு வா! என்று ஆளுநர் தரப்பிலிருந்து ஒருவருக்கு 20 ஆண்டுகளும் வழங்கப்படட்டும். ஆனால் அப்படியும் அவரால் கொண்டு வர முடியாது. இதுவே திருக்குர்ஆனின், அதன் சொற்செறிவின் உன்னதமாகும். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இது ஒன்றும் கற்பனையான அல்லது யூகமான விஷயம் அல்ல. மாறாக, திருக்குர்ஆன் இறங்கிய காலத்திலிருந்து நிகர் கொண்டு வாருங்கள் என்ற இந்த அறைகூவல் உலகிற்கு முன்னால் உள்ளது. இன்றும் கூட, இஸ்லாத்தின் எதிரிகள் சிலர் இதற்கு நிகர் கொண்டு வர முயற்சி செய்கின்றனர். அனுதினமும் யாராவது ஒருவர் ஏதாவது குழப்பம் ஏற்படுத்துகிறார். நாங்கள் இதற்கு நிகரான ஒன்றை முன்வைக்கின்றோம் என்று வாதம் புரிகின்றார்கள். ஆனால், அவர்களால் திருக்குர்ஆனின் சொற்செறிவையும், சொல்லாட்சிமையையும் நெருங்கக் கூட முடியாது. அவை வெற்று வாதங்கள் தான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சொற்செறிவிலும், சொல்லாட்சிமையிலும் இதனுடன் போட்டி போடுவது அசாத்தியம் ஆகும். உதாரணமாக, சூராஃபத்திஹாவின் தற்போதைய வரிசைக்கிரமத்தை விட்டு விட்டு, வேறு ஏதாவது ஒரு வரிசையைப் பயன்படுத்தினால் இந்த வரிசைக்கிரமத்தில் உள்ள அந்த உயர் அர்த்தங்களும் மகத்துவ மிக்க நோக்கங்களும் வேறு ஒரு வரிசையில் எடுத்துரைக்கப்படுவது சாத்தியமே இல்லை.

ஏதாவது ஒரு சூராவை எடுத்துக் கொள்ளுங்கள்.

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ

ஆனாலும் சரி! எந்த அளவு மென்மையும், மிருதுவும் கடைபிடிக்கப்பட்ட வண்ணம் அதில் இறைஞானங்களும் ஆழமான உண்மைகளும் உள்ளன என்றால், வேறு ஒருவரால் அதை எடுத்துரைக்க முடியாது. இதுவும் கூட திருக்குர்ஆனின் அற்புதம் மட்டுமே ஆகும்.

இதுவும் திருக்குர்ஆனின் அற்புதமே ஆகும். சில அறிவீனர்கள் மகாமாத்தே ஹரீ அல்லது சப்உ முஅல்லகாத் (இவை இரண்டு அரபு (கவிதை) நூல்களாகும்) இவற்றை நிகரற்றவை, இணையற்றவை என்று கூறும்போது எனக்கு வியப்பு ஏற்படுகிறது. மிகவும் உன்னதமான நூல்களாகும். அவற்றிற்கு நிகரான நூல்களே இல்லை என்கிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவ்வாறு அவர்கள் திருக்குர்ஆனின் நிகரற்றத் தன்மை மீது தாக்குதல் தொடுக்க விரும்புகின்றனர். ஆனால், அவர்கள் இந்த அளவு கூட புரிந்திருக்கவில்லை. அதாவது, முதல் விஷயம் ஹரீரீயின் நூலாசிரியர் எங்குமே அது ஈடு இணையற்றது என்று வாதம் புரியவில்லை. இரண்டாவது விஷயம், ஹரீரீயின் நூலாசிரியர்கள் சுயமே திருக்குர்ஆனின் அற்புதமான சொல்வன்மையை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். அது மட்டுமின்றி, ஆட்சேபனை செய்பவர்கள் நேர்மையையும், உண்மையையும் மனதில் கொள்வதில்லை. மாறாக, அவற்றை விட்டுவிட்டு சொற்களின் பக்கம் மட்டுமே செல்கின்றனர். மேற்கூறப்பட்ட நூல்கள் உண்மை மற்றும் நுட்பமான ஞானம் அற்றவையாகும். அற்புதத்தின் சிறப்பு மற்றும் அற்புதத்திற்கான காரணமே அது எல்லா விதமான விஷயங்களையும் கருத்தில் கொள்வதுதான்.

சொற்செறிவும் சொல்லாட்சிமையும் கைநழுவக் கூடாது. உண்மை மற்றும் நுட்பமான ஞானத்தையும் விடக் கூடாது. சொற்செறிவும், சொல்லாட்சிமையும் இருந்து, உண்மையும் இருந்து, நுட்பமான விஷயங்களும் இருக்கின்ற அந்த அற்புதம் திருக்குர்ஆனில் மட்டுமே உள்ளது. அது சூரியனைப் போன்று பிரகாசிக்கின்றது. மேலும், ஒவ்வொரு கோணத்திலும் தன்னுள் அற்புதமான ஆற்றலைக் கொண்டிருக்கிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 84-85, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

பிறகு, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருமுறை ஹரீரீ, அபுல் ஃபஸல் மற்றும் பிற ஆங்கில நூல்களைத் திருக்குர்ஆனின் அற்புதம் மற்றும் அதன் சொல்வன்மைக்கு ஈடாக ஃபண்டர் என்ற பாதிரியார் முன் வைத்தார். நீண்ட காலத்திற்கு முன் நடந்த விஷயம் ஆகும். அப்பொழுதும் இவர் பொய் பேசுகிறார் என்றே நான் நினைத்தேன். ஏனெனில், முதல் விஷயம் அந்த எழுத்தாளர்கள் ஒருபோதும் தமது நூல் ஈடு இணையற்றது என்று வாதம் புரியவே இல்லை.

இன்னும் சொல்லப்போனால், எப்பொழுதுமே அவர்கள் தமது தகுதியின்மையை ஒப்புக் கொண்டிருக்கின்றனர். மேலும் திருக்குர்ஆனைப் புகழ்ந்திருக்கின்றார்கள். இரண்டாவது, அந்த மக்களுடைய நூல்களில் சொற்களுக்குக் கட்டுப்பட்டு பொருள் செல்கிறது. வெறும் சொற்கள் மட்டுமே இணைக்கப்பட்டிருக்கும். எதுகை மோனைக்காக ஒரு சொல்லுக்கு நிகராக இன்னொரு சொல் தேடப்படுகிறது. அந்தக் கூற்றில், நுட்பமான ஞானமும் இறைஞானமும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. திருக்குர்ஆனில் உண்மை மற்றும் நுட்பமான ஞானம் கடைபிடிக்கப்பட்டுள்ளது. உண்மையும் உள்ளது; நுட்பமான ஞானமும் உள்ளது. வெறும் ஜோடியாக சொற்கள் மட்டுமே இல்லை. அதில் அழகு மட்டுமே சேர்க்கப்படவில்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அசல் விஷயம், உண்மை மற்றும் நுட்பமான ஞானம் மிக்க சொற்களோடு சேர்த்து, எதுகை மோனையையும் சரியாக நிறைவேற்றுவது என்பது இறையுதவியால் மட்டுமே கிடைக்கிறது. உண்மையும், நுட்பமான ஞானமும் இருந்து, கவிதை நடையும் சரியாக இருக்கும் என்றால், பின்னர் இறை ஆதரவு இருக்கிறது என்று தெரிய வரும். இதுவே அசல் விஷயம் ஆகும். இல்லை என்றால், ஹரீரீ போன்றவற்றை போன்று தான் மனிதர்களின் கூற்று இருக்கும். (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 205, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

அடுத்து, அன்னார் (அலை) ஒரு சபையில் இது தொடர்பாக மேற்கொண்டு கூறுகின்றார்கள். இது இஃஜாஸுல் மஸீஹ் என்ற விளக்கவுரை நூல் தொடர்பாகக் கூறப்படிருந்தது. எதிரிகளில் எவருக்கும் இதை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான ஆற்றலை இறைவன் வழங்கவில்லை. இந்த விளக்கவுரை பற்றிக் கூறப்பட்டுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சபையில் இதைப் பற்றி பேசப்பட்டுக் கொண்டிருந்தது.

அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

திருக்குர்ஆன் ஓர் அற்புதமாக இருப்பதில் இரண்டு கொள்கைகள் உள்ளன. ஒன்று, இறைவன் எதிரிகளின் துணிச்சலை அகற்றிவிட்டான். அதாவது, அந்த நேரத்தில் போட்டியாக எதையும் செய்து காட்டுவதற்கான நல்வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இரண்டாவது கொள்கை, சரியானதும், உண்மையானதும் உறுதியானதுமான கொள்கையாகும். நமது கொள்கையும் அதுவேயாகும். அது என்னவென்றால், எதிரிகள் சுயமே அதை எதிர்த்துப் போட்டியிட முடியாமல் இருந்தார்கள். உண்மையில், அவர்களுடைய அறிவும் புத்திசாலித்தனமும் பறிக்கப்பட்டிருந்தது. எமது திருக்குர்ஆன் விரிவுரையின் மூலமாக திருக்குர்ஆனின் அற்புதம் நன்றாகப் புரியப்படலாம். அறிஞர்கள் என்றழைக்கப்படுபவர்களில் ஆயிரக்கணக்கான எதிரிகள் இருக்கின்றனர். தன்மானம் ஊட்டக்கூடிய பல சொற்களும் பிரசுரங்களில் எழுதப்பட்டுள்ளன. ஆனால், எவராலும் அந்த அடையாளத்தோடு போட்டியிட முடியவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 2, பக்கம் 205, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

எனவே திருக்குர்ஆனை புரிய வேண்டும் என்ற கண்ணோட்டத்தில் நாம் அன்னாருடைய நூல்களை வாசிக்க வேண்டும்.

அடுத்து, ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் திருக்குர்ஆனுக்கு வழங்கியுள்ள அற்புதம் உயர் தரமான நல்லொழுக்கத்தின் போதனை மற்றும் நாகரீகத்தின் அடிப்படை என்பதாகும். மேலும், அதன் சொற்செறிவு மற்றும் சொல்லாட்சிமை எனும் அற்புதமாகும். எந்த மனிதனாலும் அதனோடு போட்டியிட முடியாது. இவ்வாறே மறைவானதைப் பற்றிய செய்திகள் மற்றும் முன்னறிவிப்புகள் எனும் அற்புதமும் இருக்கிறது. இந்தக் காலத்தில் மாய வித்தையில் கை தேர்ந்த எவராலும் ஒருபோதும் இவ்வாறு செய்வதற்கான வாதம் புரிய முடியாது. சொற்செறிவும், சொல்லாட்சிமையும் உள்ளது. மறைவான செய்திகளும், முன்னறிவிப்புகளும் கூட உள்ளன. இவ்வாறான விஷயத்தை எந்த ஒரு மந்திரவாதியாலும் மாய வித்தைக்காரராலும் செய்து காட்ட முடியாது. வாதமும் செய்ய முடியாது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவ்வாறு அல்லாஹ் நம்முடைய அடையாளங்களுக்கு ஒரு தெளிவான தனிச் சிறப்பை வழங்கிவிட்டான். இவ்வாறு எந்த நபரும் சாக்குப் போக்குக் கூறமுடியாது. மேலும், இறைவன் எவ்வாறு தனது அடையாளங்களைத் தெள்ளத் தெளிவாக திறந்து காட்டியுள்ளான் என்றால், அதில் எந்த ஒரு ஐயமும், சந்தேகமும் நுழைய முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 172, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

பின்னர், திருக்குர்ஆனின் சொல்வன்மை தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: மக்களின் சொற்செறிவும், சொல்லாட்சிமையும் சொற்களுக்குக் கட்டுப்பட்டு இருக்கும். அதில் எதுகை மோனையைத் தவிர வேறு எதுவும் இருக்காது. உதாரணமாக, அரேபிய கவிஞர் ஒருவர் எழுதுகிறார்:

سَافَرْتُ اِلٰى رُوْم وَ اَنَا عَلٰى جَمَلٍ مَاْلُوْمٍ

அதாவது நான் ரோம் நாட்டுக்குப் புறப்பட்டேன். எப்படிப்பட்ட ஒட்டகத்தில் பயணித்தேன் என்றால், அதனால் சிறுநீர் கழிக்க முடியாமல் இருந்தது.

இப்போது இந்த சொற்கள் (அரேபியில்) வெறும் எதுகை மோனைக்காகக் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆனால், திருக்குர்ஆன் அற்புதமாவது, அதில் எல்லாச் சொற்களும் முத்துக்களைப் போன்று கோர்க்கப்பட்டுள்ளன. தமக்கான இடத்தில் பொருத்தப்பட்டுள்ளன. எதையும் ஓரிடத்தில் இருந்து எடுத்து வேறு இடத்தில் வைக்க முடியாது. எதையும் வேறு சொற்களைக் கொண்டு மாற்ற முடியாது. ஆனால், அவ்வாறு இருந்தும், அதனுடைய எதுகை, மோனை, சொற்செறிவு மற்றும் சொல்லாட்சிமை ஆகியவற்றின் இன்றியமையாதவை அதில் இருக்கின்றன. (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 172-173, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

அடுத்து, திருக்குர்ஆனின் சொற்செறிவு மற்றும் சொல்வன்மையின் அழகை எடுத்துரைத்தவாறு ஒரு சபையில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: எந்த அளவு அடையாளங்களும், ஆதாரங்களும் இங்கு (எனக்கு) வெளிப்படுகின்றனவோ, இவை உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அதிசயங்களும், அற்புதங்களுமே ஆகும். இந்த முன்னறிவுகள் திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகளே ஆகும். ஏனென்றால், இவை அன்னாரைப் பின்பற்றுதல் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள் ஆகியவற்றின் கனிகளே ஆகும்.

இப்பொழுது வேறு எந்த ஒரு மார்க்கமும் இப்படிப்பட்டதாக இருக்கவில்லை. அதாவது, அதைப் பின்பற்றக்கூடியவர் அ(ந்)த (மார்க்கத்தி)னால் முன்னறிவிப்புகளை செய்ய முடியும் என்றோ அல்லது அதனிடம் அற்புதங்கள் வெளிப்படுகின்றன என்றோ வாதிக்க முடியாது. எனவே, இந்தக் கோணத்தில் எல்லா வேத நூல்களின் அற்புதத்தைக் காட்டிலும் திருக்குர்ஆனின் அற்புதம் மேலோங்கியுள்ளது.

அன்னாருடைய அற்புதங்களும் கூட திருக்குர்ஆனின் காரணமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் காரணமாகவே இருக்கின்றன.

அடுத்து கூறுகின்றார்கள்: பிறகு, சொற்செறிவு மற்றும் சொல்லாட்சிமை எனும் மற்றோர் அம்சமாகும். எந்த அளவு உயர் தரமானதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும் இருக்கின்றது என்றால், நீதியை விரும்பும் எதிரிகளும் கூட அதை ஏற்றுக் கொள்ள நேரிட்டது.

திருக்குர்ஆன் فَأْتُوا بِسُوْرَةٍ مِّنْ مِّثْلِهٖ என்று வாதம் புரிகின்றது.

ஆனால் இன்றுவரை எவராலும் அதற்கு நிகரானதைக் கொண்டு வரமுடியவில்லை. இதிலிருப்பதைப் போன்று ஓர் அதிகாரத்தைக் கொண்டு வாருங்கள் என்ற இந்த வாதம் திருக்குர்ஆனில் உள்ளது. மிக அதிகம் சொற்பொழிவுத் திறன் கொண்டிருந்த அரேபியர்கள் சிறப்பான சந்தர்ப்பங்களில் பெரும் பெரும் சபைகளைக் கூட்டி வந்தார்கள். அவற்றில் தமது கவிதைகளை வாசித்துக் காட்டி வந்தார்கள். அவர்களாலும் இதோடு போட்டி போட முடியவில்லை.

பிறகு, திருக்குர்ஆனின் சொல்வன்மை சொற்களுக்குப் பின்னால் மட்டும் செல்லும் வகையிலும், பொருள் அதைப் பின்பற்றுவதாகவும் இல்லை. அதாவது பொருளைப் பற்றியும் அர்த்தத்தைப் பற்றியும் கவலைப்படாமல் (சொல்லான) அதற்குப் பின்னால் (பொருள்) செல்வதாக இல்லை. மாறாக, உயர் தரமான சொற்கள் எவ்வாறு ஒரு விநோதமான வரிசைக்கிரமத்தில் வைக்கப்பட்டுள்ளனவோ அவ்வாறே அறிவாழங்களும் இறைஞானங்களும் அதில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

அறிவாழங்களையும், இறைஞானங்களையும் எடுத்துரைத்து சொற்செறிவையும் சொல்லாட்சிமையையும் கருத்தில் கொள்வது என்பது மனிதனால் செய்ய முடியாத ஒரு பணியாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்:

يَتْلُوْا صُحُفًا مُّطَهَّرَةً ۔ فِيْهَا كُتُبٌ قَيِّمَةٌ

அதாவது, ஆழமான அறிவுகளும் இறைஞானங்களும் உள்ள அப்படிப்பட்ட தூய்மையான வேதங்களை அவர்களுக்கு வாசித்துக் காட்டுகின்றார். இலக்கியங்களில் தூய்மையான போதனைகளையும், நல்லொழுக்கங்களையும் ஒருசேர கருத்தில் கொள்வது மிகவும் கடினமான விஷயம்

என்பது எழுத்தாளர்களுக்குத் தெரியும். பிறகு, இது எந்த அளவு தாக்கம் ஏற்படுத்தக் கூடிய ஈர்க்கக்கூடிய ஒரு போதனை என்றால், அசுத்தமான பண்புகளை அகற்றியும் காட்டி விட்டது. அதனுடைய இடத்தில் உயர்தர சிறப்புகளையும் உருவாக்கிக் காட்டி விட்டது.

அரேபியர்களின் நிலை என்னவாக இருந்தது என்று யாருக்கும் தெரியாமல் இல்லை. அவர்கள் எல்லாக் குறைகள் மற்றும் தீமைகளின் மொத்த உருவமாக இருந்தார்கள். நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக அவர்களின் இந்த நிலை சீர்கெட்டு இருந்தது. ஆனால், அன்னாருடைய அருள்கள் மற்றும் பரக்கத்துகளில் எந்த அளவு ஆற்றல் இருந்தது என்றால், அது 23 ஆண்டுகளுக்குள் அந்த முழு நாட்டையும் புரட்டிப் போட்டுவிட்டது. இது போதனையின் தாக்கமாகவே இருந்தது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் சிறியதிலும், சிறிய ஓர் அதிகாரத்தை எடுத்துப் பார்த்தாலும் அதில் சொற்செறிவு மற்றும் சொல்லாட்சிமையின் தரம் மட்டுமே இன்றி, போதனைகளின் சொந்த சிறப்புகளையும் உன்னதங்களையும் நிறைத்துவிட்டது தெரிய வரும். சூரா இக்லாஸ்- ஐயே எடுத்துக் கொள்ளுங்கள். ஓரிறைமையின் எல்லாப் படித்தரங்களையும் எடுத்துக் கூறிவிட்டது.

சிறிய அதிகாரம் தான். ஆனால், ஏகத்துவத்தின் முழு கருத்தையும் அதில் எடுத்துரைத்து விட்டது. மேலும், எல்லா விதமான இணைவைத்தலையும் மறுத்துவிட்டது. இதேபோன்று, சூரா ஃபாத்திஹாவைப் பாருங்கள். எந்த அளவு அற்புதமாக இருக்கிறது. சிறிய அதிகாரம்தான். அதில் 7 வசனங்கள் இருக்கின்றன. ஆனால், உண்மையில் முழுத் திருக்குர்ஆனின் திறனை உள்ளடக்கியதாகவும், சுருக்கமாகவும் பட்டியலாகவும் இருக்கிறது.

பின்னர், அதில் இறையிருப்பு அவனுடைய பண்புகள் துஆவின் தேவைகள், அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காரணிகள், வழிவகைகள், பலனளிக்கக் கூடிய உருக்கமான துஆக்களை செய்வதற்கான வழிமுறை மற்றும் இழப்பு ஏற்படுத்தும் வழிகளில் இருந்து தவிர்ந்திருப்பதற்கான நேர்வழியையும் கற்றுக் கொடுத்துள்ளது. அதேவேளையில் உலகத்தில் உள்ள ஒட்டுமொத்த பொய்யான மதங்களும் அதில் மறுத்துக் கூறப்பட்டுள்ளன.

அந்த சூரா ஃபாத்திஹாவில் சிறிய அதிகாரத்தில் எல்லா விஷயங்களும் வந்துவிட்டன. பெரும்பாலான நூல்களும், மதம் சார்ந்தவர்களும் மற்ற மதத்தின் தீமைகளையும், குறைகளையும் எடுத்துக் கூறுவதையும் மற்ற போதனைகளைக் குறை கூறிக் கொண்டிருப்பதையும் பார்ப்பீர்கள். ஆனால், மதம் சார்ந்தவர்கள் எவரும் அந்தக் குறைகளைக் கூறும்போது அதற்கு நிகராக ஏதாவது ஓர் உன்னதமான போதனையையும் முன் வைப்பதில்லை.

நான் இன்ன தீமையிலிருந்து காப்பாற்ற விரும்புகின்றேன் என்றால் அதற்குப் பகரமாக இந்த நல்ல போதனையை வழங்குகிறேன் என்ற இந்த விஷயம் எந்த மதத்திலும் இல்லை. இந்தப் பெருமிதம் திருக்குர்ஆனுக்கு மட்டுமே இருக்கிறது. அது மற்ற பொய்யான மதங்களை மறுத்துரைத்து, அவர்களின் தவறான போதனைகளைத் திறந்து கூறுகின்ற அதேவேளையில் உண்மையான மற்றும் அசலான போதனையையும் முன் வைக்கிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 46- 48, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

இது எப்படிப்பட்ட ஓர் அழகு என்றால், இதை இன்று தம்மை கற்றுத் தேர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்ளக்கூடியவர்களாலும் கூட நிராகரிக்க முடியாது. பல சந்தர்ப்பங்களில் நான் பார்த்திருக்கின்றேன்.

அந்நியர்களுக்கு முன்னால் ஏதாவது ஒரு விவகாரத்திற்குத் திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப தீர்வு முன்வைக்கப்பட்டால் அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள்.

திருக்குர்ஆனின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் எளிமையாகப் புரியக் கூடிய ஒரு மறையாகும். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: சில அறிவீனர்கள், எங்களால் திருக்குர்ஆனைப் புரிய முடியாது; எனவே அதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டாம்; இது மிகவும் கடினமானது என்று கூறுகின்றார்கள். இது அவர்களின் தவறாகும்.

திருக்குர்ஆனைப் புரிவது மிகவும் கஷ்டமான விஷயம் ஆகும்; அதை எங்களால் புரிய முடியாது; எனவே அதிகம் கவனம் செலுத்த வேண்டிய தேவை இல்லை. ஓதிவிட்டோம், அதுவே போதும் என்று அவர்கள் சாக்குப் போக்கு கூறுகிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் கொள்கை ரீதியான விவகாரங்களை எந்த அளவு உன்னதமான சொற்செறிவுடன் புரிய வைத்துள்ளது என்றால் அது ஈடு இணையற்றது; நிகரற்றது. அதன் ஆதாரங்கள் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கொள்கை ரீதியான விவகாரங்களைப் பொறுத்தவரையில் மிகவும் திறந்து (தெளிவுபடக்) கூறியுள்ளது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்தத் திருக்குர்ஆன் எந்த அளவு சொற்செறிவும் சொல்லாட்சிமையும் மிக்கது என்றால் முற்றிலும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்த அரபு நாட்டின் அந்தக் காட்டுவாசி மக்களுக்கு அது புரிய வைத்துவிட்டது. பின்னர் ஏன் (உங்களால்) அதைப் புரிய முடியாது? (மல்ஃபூஸாத் தொகுதி 9, பக்கம் 228, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு) எழுதப் படிக்கத் தெரியாத அந்த மக்கள் கிராமங்களில் வசிக்க கூடியவர்களாக இருந்தார்கள். முற்றிலும் அறிவீனர்களாக இருந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், மனிதர்களை விட்டும் மிகவும் தாழ்ந்தவர்களாக இருந்தார்கள்.

அவர்களை இறைவனின் மனிதர்களாக ஆக்கினார்கள். அவர்களுக்கே புரிந்துவிட்டது என்றால் இப்போது உங்களுக்கு ஏன் அது புரியாது! உங்களில் பெரும்பாலான மக்களோ ஓரளவு எழுதப் படிக்க தெரிந்தவர்களாக இருக்கிறீர்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நேரான, உண்மையான மற்றும் எளிமையாகப் புரியக் கூடிய உரையாடல் திருக்குர்ஆனில் இருப்பதாகும். அதில் எந்த சிக்கலும் இல்லை. ஒன்று, இறைவன் நமக்குக் கற்றுக் கொடுத்துள்ள நேரான வழியாகும். மனிதன் திருக்குர்ஆனை கவனத்தோடு படிக்க வேண்டும். அது செய்யுமாறு கூறியுள்ளதையும் செய்யக்கூடாது என்று தடுத்துள்ளதையும் தனித் தனியாக ஆக்கி வைக்க வேண்டும்.

அதாவது, எந்த விஷயங்களை செய்ய வேண்டும் என்று கூறி இருக்கிறதோ அவற்றைப் பார்க்க வேண்டும். எவற்றை விட்டும் தடுக்கப்பட்டுள்ளதோ அவற்றையும் பார்க்க வேண்டும். தனித் தனியாக(ப் பிரித்து) வைத்து, அவற்றின்படி அமல் செய்ய வேண்டும். அதன் மூலமாகவே அவர் தன் இறைவனை மகிழ்வித்து விடுவார்.

மிகவும் எளிமையான வழிமுறையாகும். செய்ய வேண்டிய கட்டளைகள், வெளிப்படையாக உங்களுக்குத் தென்படக்கூடியவை அவற்றின் படி செயல்படுங்கள். எவற்றிலிருந்து தடுக்கப்பட்டுள்ளதோ அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். இதன் மூலமாகவே இறைவன் மகிழ்ச்சி அடைந்து விடுவான். மற்றப்படி தர்க்க வாதிகளும் சூஃபிமார்களும் உருவாக்கி வைத்துள்ள உவமைகள் பெரும்பாலான மக்களுக்குத் தடுமாற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன. ஏனெனில், அவற்றில் சிக்கல்களும், கஷ்டங்களும் இருக்கின்றன.

தர்க்கவாதிகளுக்கும் சூஃபிகளுக்கும் பின்னால் செல்லாதீர்கள். அவர்களோ எப்படிப்பட்ட உவமைகளை

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

உருவாக்கியிருக்கிறார்கள் என்றால், மேலும் எத்தகைய சிரமமான வடிவில் திருக்குர்ஆனை முன்வைத்துள்ளார்கள் என்றால் அதனால் தடுமாற்றம்தான் ஏற்படுகிறது. எதுவும் புரிவதில்லை. ஆக, உலகத்தில் மக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது என்றால், தர்க்கவாதிகள் மற்றும் சூஃபிமார்கள் காரணமாகவோ அல்லது பெயர் தாங்கி அறிஞர்களின் காரணமாகவோ ஏற்படுகிறது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒரு சான்றோர் இருக்கிறார். அவர் ஏதாவது நல்ல எண்ணத்தில் எழுதியிருப்பார் என்று அவர் மீது நான் நல்லெண்ணம் கொள்கிறேன். ஆனால், அவரது கூற்று சரியானதல்ல. அவர் இவ்வாறு எழுதியுள்ளார்: ஷேக் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்கள் முழுமையான மனிதராக இருக்கவில்லை. ஏனென்றால் அவர்களிடம் முழுமையான முறையில் (விண்ணிலிருந்து) இறங்குதல் இருக்கவில்லை. (விண்ணை நோக்கிய) ஏற்றம் மட்டுமே இருந்தது. அதாவது, மேலே செல்லுதல் மட்டுமே இருந்தது. அல்லாஹ்வின் தரப்பிலிருந்து அவர்களுக்கு அவ்வாறு இறையறிவிப்பு வழங்கப்படவில்லை ; மாறாக, அவர்களின் துஆக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தன. இதன் காரணமாகவே அவர்களால் பல அற்புதங்களால் நிகழ்ந்துள்ளன. முழுமையான முறையில் (விண்ணிலிருந்து) இறங்குதல் இருந்திருந்தால் எந்த அற்புதமும் வெளிப்பட்டிருக்காது.

கூறக்கூடிய ஒருவர் இவ்வாறு கூறி இருக்கின்றார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இந்தக் கூற்று எந்த அளவு திருக்குர்ஆனுக்கு முரணாக இருக்கிறது என்றால் அது வெளிப்படையானது. இது திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸுக்கு முற்றிலும் மாற்றமான ஒரு கூற்றாகும். உண்மையில், ஷேக் அப்துல் காதிர் ஜெய்லானீ அவர்கள் இறைவனுடைய முழுமையான அடியார்களில் ஒருவராக இருந்தார்கள். அற்புதங்கள் குறித்து அவர்கள் மீது ஆட்சேபனை செய்யப்பட்டால் பிறகு இந்த ஆட்சேபனை எல்லா நபிமார்கள் மீதும் விழும்.

ஆனால், இதையும் நினைவிற் கொள்ள வேண்டும்! அவர்கள் தொடர்பாக அவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய சில மக்கள் அவர்களுடைய அற்புதங்களைக் குறித்து மிகைப்படுத்தியும் கூறியிருக்கிறார்கள். அதில் தம் தரப்பிலிருந்து கூடுதலாக எழுதி இருக்கிறார்கள். அது தொடர்பான இந்த விஷயங்கள் தவறாகும். எனினும், அற்புதங்கள் நிகழ்கின்றனதான். இயற்கை நியதிக்கும் ஷரீஅத்துக்கும் கீழ் உள்ள அந்த அற்புதங்கள் நிகழ்கின்றன. நபிமார்கள் மூலமாகவும் நிகழ்கின்றன. அவையே அவர்கள் மூலமாகவும் நிகழ்ந்தன.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இது அந்த சூஃபிகளின் தவறான உவமைகளைப் பின்பற்றியதன் விளைவாகும். அதற்குத் திருக்குர்ஆனும், ஹதீஸும் சான்றளிப்பதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 5 - 6, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு) ஒன்று, ஒரு பிரிவு அதனை முற்றிலுமே ஏற்றுக் கொள்வதில்லை அல்லது இரண்டாவது பிரிவு உள்ளது. அது ஏற்றுக் கொள்ளக்கூடியது. அது எந்த அளவு மிகைப்படுத்துகிறது என்றால், அதற்கு அளவே இல்லை. ஆக, ஏற்றுக் கொள்ளாதவர்கள் சூஃபிகளின் காரணத்தினால் (ஏற்றுக் கொள்ளாமல்) இருக்கின்றார்கள். மேலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களும் கூட தவறான வகை மக்களின் விளக்கங்களினால் (தவறான வகையில், ஏற்றுக் கொண்டு) இருக்கிறார்கள்.

எனவே, இந்த விஷயத்தில் எப்பொழுதும் கவனம் செலுத்திக் கொண்டே இருக்க வேண்டும். அதாவது ஷரீஅத்தின் சட்டம் இயற்கை நியதிக்குக் கீழ் மற்றும் நபிமார்களுடைய அற்புதங்களின் கீழ் அதை ஆராய்ந்த பார்க்க வேண்டும். நபிமார்களைக் காட்டிலும் அதிகமாக யாராலும் அற்புதத்தைக் காட்ட முடியாது.

திருக்குர்ஆன் உண்மையான இறைவனை முன் வைக்கிறது என்பது தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைவனுக்கு நன்றி! திருக்குர்ஆன் பலவீனமான இறைவனை முன்வைக்கவில்லை. அதாவது, ஆன்மாக்களுக்கும் எஜமானன் அல்லாத, அணுக்களுக்கும் எஜமானன் அல்லாத அவற்றிற்கு ஈடேற்றமும் அளிக்க முடியாத எவருடைய பாவமன்னிப்பையும் ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் இறைவனை திருக்குர்ஆன் முன் வைக்கவில்லை.

மாறாக, நாம் திருக்குர்ஆன் அடிப்படையில் எத்தகைய இறைவனின் அடியார்கள் என்றால், அவன் நம்மைப் படைத்தவன் ஆவான். நம் எஜமானன் ஆவான். நமக்கு உணவளிப்பவன் ஆவான். அளவற்ற அருளாளன் ஆவான். மேன்மேலும் கருணை காட்டக் கூடியவன் ஆவான். தீர்ப்பு நாளின் எஜமானன் ஆவான். நம்பிக்கை கொண்டவர்களுக்கு இது நன்றி செலுத்துவதற்கான இடமாகும். அவன் நமக்கு எப்படிப்பட்ட மறையை அளித்திருக்கின்றான் என்றால், அது அவனது சரியான பண்புகளை வெளிப்படுத்துகிறது. இது இறைவனின் மாபெரும் அருட்கொடையாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 10, பக்கம் 98, பதிப்பு- 1984 ஆம் ஆண்டு)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அறிவு, இறைஞானம், திருக்குர்ஆனின் சிறப்புகள் மற்றும் அதன் அந்தஸ்து தரம் ஆகியவை குறித்த விஷயங்கள் இனிவரும் காலங்களிலும் எடுத்துரைக்கப்படும். இன்ஷாஅல்லாஹ்

இப்பொழுது நான் இங்கு நிறைவு செய்கிறேன். அல்லாஹ் நமக்கு இந்த விஷயங்களைப் புரிவதற்கும் இவற்றின்படி செயல்படுவதற்கும் திருக்குர்ஆனை ஓதுவதற்கும் மற்றும் அதைப் புரிவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

நான் இப்பொழுது சில மர்ஹூம்களைப் பற்றியும் கூறப்போகின்றேன். குறிப்பாக பங்களாதேஷின் ஷஹீதைப் பற்றிக் கூறப்போகின்றேன். அதற்குப் பிறகு நான் ஜனாஸா தொழுகையும் தொழ வைப்பேன். எனவே, இப்பொழுது நான் அதைப் பற்றி கூறுகின்றேன்.

நாம் அறிந்ததைப் போன்று வங்காளதேஷத்தில் கடந்த நாட்களில் கடந்த ஜூமுஆ அன்று மாநாடு நடைபெற்று வந்தது. மாநாட்டின் போது, கலவரக்காரர்களும், பயங்கரவாதிகளும் தாக்குதல் நடத்தினர். முன்னரே நிர்வாகமும் காவல் துறையும் ஒன்றும் நடக்காது; நாங்கள் கட்டுப்படுத்தி விடுவோம்; எனவே நீங்கள் மாநாட்டை நடத்துங்கள் என்று திருப்தியளித்தார்கள்.

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், மக்கள் வந்ததும் காவல்துறை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தது. எதுவரை என்றால், சில மணிநேரம் கழிந்த பிறகு, மேலிடத்திலிருந்து அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு அப்போதுதான் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டார்கள். ஆனால், அப்பொழுது வரை நிறைய விஷயங்கள் நடந்து விட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்தக் கலவரத்தில் நம் சகோதரர், இளைஞர் ஸாஹித் ஹஸன் சாஹிப் அவர்களும் ஷஹீத் ஆகிவிட்டார்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர் வங்களாதேசத்தைச் சார்ந்த அபூபக்ர் சித்தீக் சாஹிப் அவர்களின் மகனாவார்.

தேசிய அமீர் அப்துல் அவ்வல் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: அஹ்மது நகர் பஞ்ஜுகர் மாவட்டத்தில் நடைபெற்ற மாநாட்டில் நுழைவுவாயில் மற்றும் வளாகத்தில் காவல் காக்கும் பணியில் இருந்தபோது, எதிரிகளின் தாக்குதல்களின் விளைவாக ஸாஹித் ஹஸன் ஸாஹிப் மார்ச் 3 அன்று தமது 25 ஆவது வயதில் ஷஹீத் ஆனார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

மர்ஹூம் 2019 -இல் பைஅத் செய்தார். மூன்று மாதத்திற்குப் பிறகே வஸிய்யத் செய்வதற்கான விண்ணப்பத்தைக் கொடுத்து விட்டார். இவரது குடும்பம் அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சார்ந்ததாக இருந்தது. மர்ஹூம் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தம்முடைய பெற்றோருக்குத் தப்லீக் செய்ய ஆரம்பித்துவிட்டார். அதன் விளைவாக இவருடைய பெற்றோரும் 2020 ஆம் ஆண்டு பைஅத் செய்யும் நற்பாக்கியம் பெற்றார்கள்.

பைஅத்திற்குப் பிறகு ஷஹீத் மர்ஹூம் தொடர்ச்சியாக எனக்குக் கடிதமும் எழுதி வந்தார். இவர் பைஅத் செய்து அஹ்மதி ஆன சம்பவம் இவ்வாறு உள்ளது:

இவருடைய வகுப்பு தோழர் ஒருவர் பூக்ரா நகரத்தில் பந்தாரா அறிவியல் பல்கலைக் கழகத்தில் படித்து வந்த முஹம்மது ரிஃப்அத் ஹஸன் என்பவர் ஆவார். இவர்கள் இருவரும் Science & Technology -இல் Bsc படித்துக் கொண்டிருந்தார்கள். அந்த அஹ்மதி நண்பர், இளைஞர் இவருக்குத் தப்லீஃக் செய்தார். இரண்டு வருட தப்லீஃகிற்குப் பிறகு, இவருக்கு அஹ்மதியத்தின் உண்மை

வெளிப்பட்ட பிறகு இவர் பைஅத் செய்துவிட்டார்.

அவ்வல் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: மாநாடு துவங்கியதிலிருந்தே மாநாட்டுத் திடலின் நாலாப்புறத்திலிருந்தும் முல்லாக்கள் தங்களுடைய கும்பலுடன் மாநாட்டுத் திடலின் சுவற்றின் மீதும் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நுழைவுவாயிலின் மீதும் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தார்கள். கற்களை வீசியது மட்டுமல்லாமல் கோடாரிகள், இரும்புக் கம்பிகள் போன்ற நாட்டு ஆயுதங்களாலும் இவர்கள் தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தார்கள். சந்தர்ப்பம் கிடைத்த இடத்தில் எல்லாம் அவர்கள் நெருப்பு மூட்டி வந்தார்கள்.

காதிம்கள் மிகவும் வீரமாகத் தங்களுடைய டியூட்டிகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள். பொதுவாக, டியூட்டியில் இருந்தவர்களைத் தவிர வேறு எவரும் வெளியில் செல்லவில்லை. அனைத்து காதிம்களும் உள்ளேயே இருந்தார்கள். உள்ளிருந்தவாறே பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள். கூறுகின்றார்கள்:

மாநாடு துவங்கி ஒன்றே முக்கால் மணி நேரத்திற்குப் பிறகு தாக்குதல் தொடுத்தவர்கள் சுவற்றின் ஒரு பகுதியை உடைப்பதில் வெற்றிக் கண்டவுடன் காதிம்களிடம் என்ன விலை கொடுத்தாலும் சரி! சுவரையும், மாநாட்டுத் திடலையும் பாதுகாப்பதை உறுதிப்படுத்துங்கள் என்று கூறப்பட்டது.

அப்பொழுது நுழைவு வாயில் எண் ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த ஸாஹித் ஹஸன் ஷஹீத், தம்முடன் இருந்தவர்களுடன் இணைந்து மாநாட்டுத் திடலின் சுவற்றைத் தாக்கிக் கொண்டிருந்தவர்களை அப்புறப்படுத்துவதற்காக மிகவும் வேகத்துடனும், துணிவுடனும் சென்றடைந்தார். அப்போது ஒரு சந்தர்ப்பத்தில் இவர் போராடிக் கொண்டே தம் நண்பர்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டார்.

ஆக, சந்தர்ப்பத்தை சாதகமாக்கி தனியாக இருந்த அவரை தாக்குதல் தொடுத்தவர்கள் பிடித்துவிட்டார்கள். அவரது தலைக்குப் பின்பகுதியில் கோடாரியாலோ அல்லது வேறொரு கூர்மையான ஆயுதத்தாலோ தாக்கிவிட்டார்கள். பின்னர் அவரை சிறிது தூரத்திற்கு இழுத்துச் சென்றார்கள்.

அவரது முகம் மற்றும் உடலின் பிற பகுதிகளில், மிகவும் இரக்கமற்ற முறையிலும், கொடூரமாகவும் தாக்குதல் தொடுத்தவாறு தாங்கள் மிருகங்கள் என்பதை அவர்கள் நிரூபித்துவிட்டார்கள்.

ஷஹீத் மார்ஹூம் ஸாஹித் ஹஸனை எந்த அளவிற்கு இரக்கமற்ற முறையில் ஷஹீத் ஆக்கினார்கள் என்றால், அவரை அடையாளம் காண்பதில் இரண்டு மணி நேரம் தாமதமானது. இதுதான் இந்த முஸ்லிம்களின் நிலை. அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் அநீதியில், அக்கிரமத்தில் அவர்கள் எல்லை கடந்துவிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ போர்களில் கூட எதிரிகளின் நிராகரிப்பாளர்களின் மூக்கு, காது போன்ற உடல் பாகங்களை சிதைப்பதை விட்டும் தடுத்திருந்தார்கள்.

ஆனால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரை கூறக்கூடிய மக்களுடன் இந்த மக்கள் இவ்வாறு நடந்து கொள்கின்றனர். அல்லாஹ்தான் இவர்களைப் பிடித்து இவர்களை மண்ணோடு மண்ணாக்க வேண்டும்.

அவ்வல் ஸாஹிப் கூறுகின்றார்கள்: இவரது டியூட்டி Identiy Card-ஐயும் கொலைகாரர்கள் அவரது கழுத்திலிருந்து கழட்டி தனியாக்கி விட்டார்கள். ஆனால், குத்தாமின் டியூட்டி உடை அணிந்திருந்ததால் ஓரளவு அடையாளம் கண்டு கொள்ளப்பட்டார். பிறகு, எவ்வாறு இருப்பினும் இவரது உடல் பெறப்பட்ட பின் தஹஜ்ஜுத் மற்றும் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு இவரது ஜனாஸா தொழப்பட்டது.

நாடு முழுவதிலிருந்தும் மாநாட்டிற்காக வருகை தந்திருந்த ஆயிரக்கணக்கான அஹ்மதிகள் அதில் கலந்து கொண்டார்கள். ஜனாஸா தொழுகையின் போது அங்கிருந்தவர்களுக்கு எத்தகைய நிலை ஏற்பட்டது என்றால் அதற்கு உதாரணமே கிடையாது. அங்கு மிகுந்த உருக்கம் நிலவியது. அனைவரும் இறைவன் முன் மன்றாடிக் கொண்டிருந்தார்கள். அதற்கு பிறகு, சட்ட ரீதியான நிர்பந்தத்தின் கீழ் சடலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

பிற்பகலுக்குப் பிறகு பயணக் குழுவுடன் ஷஹீத் மர்ஹூமின் உடல் அவரது சொந்த ஊருக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பப்பட்டது. அங்கு இரவு 10 மணி அளவில் அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

ஷஹீத் மர்ஹூமின் மிக நெருங்கிய நண்பர் அன்பிற்குரிய ரிஃப்அத் ஸாஹிப் கூறுகின்றார்: பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும்போது இவருடன் நெருங்கிய நட்பு உருவானது. இவர் இயல்பாகவே நல்ல ஒழுக்கமான மனிதராக இருந்தார். ஆனால், இறைவழிபாடுகளில் ஈடுபாடு குறைவாக இருந்தது. ஆனால், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, அவரது நிலை தலைகீழாக மாறியது. ஜமாஅத்தான தொழுகைகளை நிறைவேற்றுவதற்குப் பழக்கப்பட்டுவிட்டார். இவர் மிகவும் தன்னடக்கமுள்ள, கனிவான சுபாவமுள்ள, பணிவிணக்கம் உடைய இளைஞராக இருந்தார். நண்பர் கூறுகின்றார்: நான் ஐந்து வருடங்களில் அவரை யாருடனும் சத்தமாகப் பேசி பார்த்ததில்லை. பைஅத் செய்த சில மாதங்களிலேயே இவர் வஸிய்யத் செய்யும் நற்பாக்கியமும் பெற்றுவிட்டார். இதன் மூலம் இவரது நற்பேறு பற்றி தெரிய வருகிறது. பிறகு, கூறுகிறார்: அன்பிற்குரிய ஸாஹித் ஹஸன் ஷஹீத் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சுறுசுறுப்பான உறுப்பினராக இருந்தார். ஷஹாதத்தின்போது இவர் டாக்கா மற்றும் பாரிசால் உடைய குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உள்ளூர் முஃதமத் ஆக தொண்டாற்றி வந்தார். மேலும், டாக்காவின் மோத்தி ஜீலின் ஹல்காவின் (வட்டாரத்தின்) ஸயீமாகவும் இருந்தார்.

இதே மஜ்லிஸின் காயிதும் முஹ்தமீம் முகாமியும் ஆன ஜனாப் ஸஃரூல் இஸ்லாம் ஸாஹிப் கூறுகின்றார்:

இவர் மஜ்லிஸ் பணிகளில் மிகவும் முறையாகவும், தன் சீனியர்களுக்கு அதிகம் கட்டுப்பட்டவராகவும் இருந்தார். ஒப்படைக்கப்பட்ட டியூட்டியையும் தொண்டுகளையும் முழுமையாக முகமலர்ச்சியுடன் நிறைவேற்றி வந்தார். ஸலாம் கூறுவதில் எப்போதும் முந்திக் கொள்வார். எப்பொழுதும் புன்சிரித்தவாரே இருப்பார். கூறுகின்றார்:

ஒரு வருடம் அல்லது ஒன்றே கால் வருடம் முன்பு இவர் Bsc தேர்ச்சி பெற்ற பிறகு, ஒரு கம்பெனியில் சர்வீஸைத் தொடங்கினார். வேலை விஷயமாக டாக்காவில் இருந்து, எப்போதாவது வெகு தொலைவில் உள்ள இடத்திற்குச் செல்ல வேண்டியது வந்தால், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அருகிலுள்ள மஜ்லிஸுக்கு சுற்றுப் பயணமும் செல்வார். இவரது முகநூல் கணக்கில் Personal Profile ஆக

وَمَنۡ يَّتَوَكَّلۡ عَلَى اللّٰهِ فَهُوَ حَسۡبُهٗ

(அதாவது அல்லாஹ்விடம் நம்பிக்கை வைப்பவருக்கு அவனே போதுமானவன்) என்ற வசனத்தின் பொருள் எழுதப்பட்டுள்ளது.

முரப்பி ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் கூறுகிறார்கள்: அந்த நேரத்தில் நான் திபாடியா ஜமாஅத்தில் நியமிக்கப்பட்டிருந்தேன். அப்போது ஷஹீத் மர்ஹூம் தமது நண்பர் ரிஃபத் ஹுஸைன் ஸாஹிபுடன் தப்லீஃகின் கீழ் உள்ள சகோதரராக வருகை தந்திருந்தார். பைஅத் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை அவர் வெளிப்படுத்தினார்

நான் அவரிடம், நீங்கள் இன்னும் நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். நன்றாக ஆராய்ந்து கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு, நான் ஜமாஅத்தின் உண்மையை ஏற்றுக் கொண்டுவிட்டேன். இருந்தாலும் தாங்கள் கூறுவதால் பின்னர் வந்து பைஅத் செய்கின்றேன் என்று அவர் கூறினார்.

எனவே அடுத்த முறை அல்லது அதற்குப் பிறகு அவர் பைஅத் செய்துவிட்டார். முரப்பி ஸாஹிப் கூறுகின்றார்கள்: பைஅத் செய்த பிறகு அவர் அஹ்மதிய்யத்தையும், கிலாஃபத் அமைப்பையும் புரிந்து கொள்வதற்கான முழு முயற்சியை தொடங்கிவிட்டார். மிகவும் ஆழ்ந்த அறிவைப் பெற்றார். நான் குறிப்பிட்டதைப் போன்று எனக்கும் கடிதங்கள் எழுதி வந்தார்.அவர் எழுதிய கடைசி கடிதத்தையும் அவர் மாநாட்டுக்கு செல்லும் போது எழுதினார். அதாவது நாங்கள் ரயிலில் மாநாட்டிற்காக செல்கிறோம். எதிரிகளின் திட்டங்கள் மிகவும் ஆபத்தானவை. சில இடங்களில் அவர்கள் நெருப்பும் மூட்டி உள்ளனர். ஆனால், நாங்கள் மாநாட்டை நடத்துவோம் இன்ஷாஅல்லாஹ் என்று எழுதியிருந்தார்.

மேலும், தன் ஈமானை வெளிப்படுத்தியிருந்தார். பின்னர், தனது உறவினர்கள், தனது கிராம வாசிகள் அனைவரும் அஹ்மதியாக வேண்டும்; அந்த கிராமம் முழுவதும் அஹ்மதியாக வேண்டும் என்றும் (தன் விருப்பத்தையும்) அதில்

வெளிப்படுத்தியிருந்தார். இது அவர் எழுதிய கடைசி கடிதமாகும்.

ஒரு காதிம் கூறுகின்றார்: ஷஹீத் எவ்வளவு பணிவுள்ள பணியாளராக இருந்தார் என்றால், எப்போது அவருக்கு யாராவது வேலை கொடுத்தாலும் அவர் மாட்டேன் என்று கூறியதில்லை. அவர் கூறுகிறார்:

சில சமயங்களில் நான் அவரிடம் ஸாஹித் பாய்! இவ்வளவு வேலை செய்து கொண்டே இருந்தால் முடிந்து போய் விடுவோம் என்று நகைச்சுவையாக கூறுவேன். இதைக் கேட்டு எப்பொழுதும் புன்சிரித்து விடுவார். ஷஹீத் மர்ஹூம் வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார். காதிம் கூறுகின்றார்: அவர் இவ்வளவு விரைவாக வஸிய்யத் செய்வதற்கு என்ன காரணம் ? என்று நான் அவரிடமிருந்து அறிய விரும்பினேன். அதற்கு அவர், இமாம் மஹ்தி உண்மையாளர் ஆவார்கள். அவர்கள் கூறியது அனைத்தும் உண்மையாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வஸிய்யத் செய்யுமாறு வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள். எனவேதான் நான் வஸிய்யத் செய்துவிட்டேன் என்று கூறினார். அவர் கூறுகிறார்:

நான் அவர் கூறியதைக் கேட்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது இத்தனை ஆழ்ந்த ஈமான் கொண்டுள்ளாரா! என்று வியப்படைந்தேன். பிறகு கூறுகிறார்: ஒருமுறை ஷஹீத் மர்ஹூமிடம் அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதற்கான ஓர் அடிப்படைக் காரணம் பற்றிக் கேட்கப்பட்டபோது அவர் கூறினார்: இன்று வரை இமாம் மஹ்தி என்றோ அல்லது மஸீஹ் என்றோ நபி என்றோ வாதம் புரிந்தவர் எவரும் வெற்றி பெற்றதும் இல்லை ; எந்த ஜமாஅத்தும் வெற்றி பெற்றதில்லை. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் மட்டுமே வெற்றி பெற்றார்கள். அன்னார் (அலை) உண்மையாளராக இல்லாமல் இருந்திருந்தால் பொய் நபித்துவ வாதிகளைப் போன்று அன்னாரது நிலையும் ஆகியிருக்கும்.

முன்பே கூறியதுபோன்று ஷஹீத் மர்ஹூமின் பெற்றோர்கள் இருவரும் உயிரோடு இருக்கின்றார்கள். அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகளாக இருக்கின்றார்கள். ஷஹீத் மர்ஹூம் தம் பெற்றோருக்கு ஒரே மகனாக இருந்தார். திருமணமாகாதவராக இருந்தார். அவருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர். ஆனால், அவர்கள் அஹ்மதிகள் அல்ல. தப்லீக்கின் கீழ் உள்ளனர்.

அல்லாஹ் அவர்களின் பெற்றோருக்கும் பொறுமையையும், மன தைரியத்தையும் வழங்குவானாக. நான் கூறியதைப் போன்று ஒரே மகனாகப் பிறந்தார். இது மிகப் பெரிய துயரமாகும். அல்லாஹ்வின் அருளால் மட்டுமே பெருந்துன்பத்தைத் தாங்கிக் கொள்வதற்கான நற்பேறு கிடைக்கின்றது. ஷஹீதின் அந்தஸ்தையும் உயர்த்துவானாக.

எவ்வாறு இருப்பினும், அல்லாஹ்வின் கூற்றிற்கு ஏற்ப இந்த ஷஹீத் நிரந்தரமான வாழ்வைப் பெற்றுவிட்டார். அல்லாஹ் அவருடன் எப்போதும் சிறப்பான முறையில் நடந்து கொள்வானாக. இந்த அநியாயக்காரர்களைப் பிடிப்பதற்கான ஏற்பாட்டையும் விரைவில் செய்வானாக.

ஜமாஅத் மக்களை இப்படி சோதனைகளில் ஆழ்த்தி, கடுமைகளைக் காட்டி அவர்களது தைரியத்தை குறைத்துவிடலாம் என்று எதிரி நினைக்கிறான். ஆனால், அதற்கு முற்றிலும் மாற்றமாக நடக்கின்றது. அங்கிருந்தும் எனக்கு சில கடிதங்கள் வந்துள்ளன. சில இளைஞர்களும் இவ்வாறு கடிதம் எழுதியுள்ளார்கள்: மேற்கொண்டு ஷஹீத் ஆக வேண்டிய தேவை ஏற்பட்டால் நாங்களும் அவர்களில் ஒருவராக இருக்க வேண்டும் என்று துஆ செய்யுங்கள்.

ஆக, இப்படிப்பட்ட மக்களை இந்த நீசமான எதிரிகளால் என்ன செய்துவிட முடியும்? எவ்வாறு இருப்பினும் நாம் துஆ செய்ய வேண்டும். **அல்லாஹ் அவர்களின் தீங்கிலிருந்து நம்மை பாதுகாப்பானாக. நம் மீது கருணையும் அருளும் புரிவானாக. இன்றைய நாட்களில் துஆக்களில் அதிகம் அழுத்தம் கொடுங்கள்.**

நான் எடுத்துக் கூற விரும்பும் இரண்டாவது ஜனாஸா அல்ஜீரியாவின் கமால் பதா ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் பிப்ரவரி 2 ஆம் தேதி 57 வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

ஜமாஅத்தின் சத்ர் அப்துல் அலீம் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூம் ஓர் உண்மையான நம்பிக்கையாளராகவும், களங்கமற்ற அஹ்மதியாகவும் இருந்தார்கள். அன்னார் தமது இல்லத்தை ஜமாஅத்தின் கூட்டங்கள், தொழுகைகள் மற்றும் தப்லீகின் பணி மும்முரங்களுக்காக எப்போதும் திறந்து வைத்திருந்தார்கள்.

எல்லா அஹ்மதிகளும் அன்னாரின் ஈமானிய ஆற்றல் விருந்தோம்பல் பண்பு மற்றும் பரந்த மனப்பான்மைக்குச் சான்று பகர்கின்றார்கள். மர்ஹூம் அவர்கள் மனைவி மட்டுமின்றி, மூன்று பிள்ளைகளை நினைவாக பின்விட்டுச் சென்றுள்ளார்கள். அவர்களில் இரண்டு மகன்கள் அஹ்மதி அல்லாதவர்கள். ஒரு மகள் அஹ்மதி ஆவார். அன்னாரின் மனைவி மதிப்பிற்குரிய கரீமா ஸாஹிபா லஜ்னா தலைவியாக தொண்டாற்றும் நற்பேறைப் பெற்றுள்ளார்.

அல்ஜீரியாவில் இருந்து ஹஸ்ஸான் ஸமூலீ ஸாஹிப் கூறுகின்றார்கள்: கமால் பதா ஸாஹிப் அவர்கள் மிகவும் களங்கமற்றவராகவும் அதிகம் தொண்டாற்றக்கூடிய அஹ்மதியாகவும் இருந்தார்கள். அண்டை வீட்டார் தரப்பிலிருந்து பல்வேறு துன்பங்கள் இருந்தும் கூட இறுதி மூச்சு வரை தமது இல்லத்தைத் தொழுகைக்காகத் திறந்து வைத்திருந்தார்கள். ஜுமுஆ தொழுகைக்காக வரக்கூடிய விருந்தாளிகளுக்கான உணவை சிலநேரம் தாமே சமைத்து வந்தார்கள். கித்மதே கல்கின் பல பணிகளிலும், இரத்த தானம் வழங்கும் பணிகளிலும் பங்கேற்று வந்தார்கள்.

மர்ஹூம் அவர்களின் இல்லத்தில் பல நிகழ்ச்சிகளும் பெருநாள் தொழுகையும் நடந்து வந்தன. அரசாங்கத்திடம் செல்லக்கூடிய ஜமாஅத் குழுவிலும் மர்ஹூம் இணைந்திருந்தார்கள். நாங்கள் ஜமாஅத்தின் வரலாறை எழுதுகிறோம் என்று மர்ஹூம் கூறிவந்தார்கள். ஏனெனில், இன்றைய நாட்களில் அல்ஜீரியாவில் செய்யப்படும் அந்தக் கொடுமைகளின் காரணமாக (அவ்வாறு கூறினார்கள்).

இப்போது மர்ஹூம் சுயமே அந்தத் திட்டத்தின் அங்கமாக ஆகிவிட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி அவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா டாக்டர் ஷமீம் மலிக் ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் 2010-ல் தாருஸ் ஸிக்ர் லாஹூரில் ஷஹீதான மதிப்பிற்குரிய மக்ஸூத் அஹ்மத் மலிக் ஸாஹிப் அவர்களின் மனைவியாவார்கள். தமது கணவர் ஷஹீத் ஆன பிறகு, சில காலங்கள் கழித்து அன்னார் கனடா சென்று விட்டார்கள். அங்கு அன்னார் மரணமடைந்திருக்கின்றார்கள். மர்ஹூமா அவர்கள் Phd வரை கல்வி பயின்றுள்ளார்கள். கல்லூரியில் கற்பித்து வந்தார்கள். பேராசிரியை ஆவார்கள். Head of the Department பதவி வரை முன்னேறினார்கள். ஆனால், அத்துடன் வீட்டுப் பணிகள், குழந்தைகளுக்கான பொறுப்புகள் ஆகிய அனைத்தையும் மிக அழகான முறையில் நிறைவேற்றினார்கள்.

பாரபட்சமின்றி அனைத்துத் தரப்பு மக்களையும் தாராள மனப்பாங்குடன் உபசரித்து வந்தார்கள். ஏழைகளைக் கவனித்துக் கொள்ளக் கூடிய எல்லாரும் கருத்துக் கேட்கக் கூடிய பெண்மணியாக இருந்தார்கள். ஜமாஅத் அல்லாதவர்களுக்கும் அஹ்மதி அல்லாத உறவினர்களுக்கும் எப்பொழுதும் இறைவன் பால் அழைப்பு விடுத்து வந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை வாசித்து வந்தார்கள்:

இவர்களின் வாழ்நாளிலேயே பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் அன்னாரைப் பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டது. ஆய்வுக் கட்டுரை (பொதுவாக) பின்னரே எழுதப்படும். ஆனால், அன்னாரைக் குறித்து அன்னாரின் வாழ்நாளிலேயே எழுதப்பட்டது. அன்னாருக்குக் கல்வி மீது அளவு கடந்த ஆர்வம் இருந்தது. பல மக்களுக்குத் திருக்குர்ஆன் ஓதக் கற்றுத் தந்துள்ளார்கள். நோன்பு, தொழுகை, மற்றும் திருக்குர்ஆன் ஓதுதல் ஆகியவற்றை முறையாகப் பேணி வந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுகையைத் தொடர்ச்சியாக தொழுது வந்தார்கள்.

இஸ்லாமிய அடையாளங்களைக் கடைபிடிக்கக்கூடிய, பர்தாவைப் பேணக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். களங்கமற்றவராகவும், நன்றியுணர்வுள்ளவராகவும் இருந்தார்கள். கிலாஃபத்துடன் சிறப்பான பற்றுறுதியின் தொடர்பு அன்னாருக்கு இருந்தது. மர்ஹூமா வஸிய்யத் செய்தவராகவும் இருந்தார்கள். பின் விட்டுச் சென்றவர்களில் ஒரு மகனும்

நான்கு மகள்களும் உள்ளனர். அன்னார் லாஹூரின் அமீர் ஜமாஅத் மலிக் தாஹிர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் சகோதரியாக இருந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருக்குப் பாவமன்னிப்பு வழங்கி அன்னாருடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளையும் சந்ததிகளையும் எப்போதும் கிலாஃபத்துடனும், ஜமாஅத்துடனும் இணைத்து வைப்பானாக.

அடுத்த நற்குறிப்பு அன்பிற்குரிய ஃபர்ஹாத் அஹ்மத் உடையதாகும். அவர் ஜெர்மனியைச் சேர்ந்த இர்ஷாத் அஹ்மத் அமீனீ ஸாஹிபின் மகன் ஆவார். அவர் கடந்த நாட்களில் தமது 26 ஆவது வயதில் மரணமடைந்துவிட்டார்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அவர் பிராங்ஃபுட் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். அருளுக்குரிய வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்திருந்தார். மரணத்திற்கு முன் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் உள்ளூர் அளவிலும், மண்டல அளவிலும் தொண்டாற்றும் நற்பேறு பெற்றிருந்தார்.

மர்ஹூம் மிகவும் நற்பண்புள்ள, மகிழ்ச்சியான இயல்புள்ள, கட்டுப்படக்கூடிய மற்றும் நன்றாகப் பழகக்கூடிய இளைஞராக இருந்தார். ஜமாஅத் மற்றும் கிளை அமைப்புப் பணிகளுக்காக எப்பொழுதும் தயாராக இருந்து வந்தார். மரணத்திற்கு ஒரு நாள் முன்பு, ஒரு ஜமாஅத் நிகழ்ச்சியில் நாள் முழுவதும், பின்னர் இரவு நீண்ட நேரம் வரை தொண்டாற்றி வந்தார்.

அடுத்த நாள் மீண்டும் பள்ளிவாசலில் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு, குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஒரு கூட்டத்தில் பங்கேற்றார். கூட்டத்திற்குப் பிறகு தம் இல்லத்திற்கு செல்ல முற்பட்டார்.

தமது காருக்கு அருகில் வந்தவுடன், அங்கு அவரது உடல்நிலை சரியில்லாமல் போக ஆரம்பித்தது. முரப்பி ஸாஹிப் அவர்கள் அவரைத் தமது மிஷன் ஹவுஸின் ஜன்னலில் இருந்து பார்த்தார்கள். அன்னார் அவருக்கு உதவி செய்வதற்காக சென்றார்கள். இதற்கிடையில் அவர் தம் காரில் அமர்ந்து விட்டார்தான். ஆனால், உடல் நிலை மிகவும் மோசமானது. ஒருவேளை அப்பொழுது அவருக்கு கடுமையான மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம். இவ்வாறே மருத்துவர்கள் கூறுகின்றார்கள். மூன்று, நான்கு நிமிடத்தில் ஆம்புலன்ஸும் வந்துவிட்டது. அவர்கள் மருத்துவ உதவிகளையும் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் ஏறக்குறைய 45 நிமிடங்கள் முயற்சியும் செய்தார்கள். ஆனால், இறைவன் விதித்த விதியே மேலோங்கியது. அன்னார் தம் உண்மையான படைத்தவனை சென்றடைந்தார்கள்.

அன்பிற்குரிய ஃபர்ஹாத் தம் பெற்றோருக்கு ஒரே பிள்ளையாவார். அல்லாஹ் அன்னாரின் பெற்றோருக்கும் பொறுமையையும் மன தைரியத்தையும் வழங்குவானாக. அன்னாருக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக. படித்தரத்தை உயர்த்துவானாக.

அடுத்த நற்குறிப்பு சவ்த்ரி ஜாவேத் அஹ்மத் பஸ்மல் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் இன்றைய நாட்களில் கனடாவில் இருந்தார்கள். அன்னார் கடந்த நாட்களில் தமது 72வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். தஹ்ரீகே ஜதீதின் நிலங்களில் மிக நீண்ட காலம் அதாவது 24,25 ஆண்டுகள் அன்னாருக்கு மேனேஜர் ஆகப் பணிபுரியும் நற்பேறு கிடைத்தது. பின்னர் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் இதர ஜமாஅத் சேவைகளுக்கான நற்பேறும் அன்னாருக்கு கிடைத்து வந்தது. அன்னாருக்கு உமர் கோட் மாவட்டத்தின் அமீராகவும் சேவை செய்யும் நற்பேறு கிடைத்தது. அன்னார் பின்விட்டுச் சென்றவர்களில் மனைவி, நான்கு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர்.

அன்னாரின் மகன் தாஹிர் அஹ்மது ஸாஹிப் கூறுகின்றார்கள்: என் தந்தையார் பல சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். மார்க்க சேவகராகவும், மனித குலத்துக்குப் பயனளிப்பவராகவும் இருந்தார்கள். கிலாஃபத்துடன் ஆழிய நேசம் இருந்தது. அன்னார் கிலாஃபத்துடன் சிறப்பான தொடர்பு இருக்க வேண்டும் என்றே எப்பொழுதும் முயற்சி செய்து வந்தார்கள். ஏழைகள் மீது அதிகம் அக்கறை கொண்டவராக இருந்தார்கள்.

அன்னார் நிலஉரிமையாளராக இருந்தார்கள். அன்னாருக்கு சிந்துப் பகுதியில் நிலங்களும் இருந்தன. இங்கிருந்து செல்லும்போதெல்லாம் தமது பலவீனமான ஏழை நண்பர்களுக்காக அவர்களுடைய திருமணங்களில் பயன்படும் என்று அன்பளிப்புகள் மற்றும் ஆடைகள் போன்றவற்றை வாங்கிச் செல்வார்கள்.

மகன் கூறுகின்றார்: விருந்தோம்பல் பண்பு மிக அதிகமாக இருந்தது. அனுதினமும் எங்கள் வீட்டிற்கு விருந்தாளிகள் வந்த வண்ணம் இருப்பார்கள். அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்வார்கள். அல்லாஹ் அன்னாரை மிகவும் வீரமிக்கவராகவும் ஆக்கியிருந்தான். அன்னார் எதிரிகளை எதிர் கொள்ள நேரிடும் போதெல்லாம் ஜமாஅத்தின் தன்மானத்தை முன் நிறுத்துவார்கள்.

பல நீதிமன்ற வழக்குகளில் மிகவும் தைரியமாக ஜமாஅத்தைப் பின்பற்றினார்கள். இதனால் எதிரிகள் இரண்டு முறை அவர்களை தாக்கவும் செய்தார்கள். ஆனால், அப்போது அல்லாஹ் அங்கிருந்து அவர்களைக் காப்பாற்றி விட்டான். மிகவும் கடினமாக உழைத்தார்கள். எப்பொழுதும் ஜமாஅத்தின் பணத்திற்கு மிகவும் மதிப்பளித்து வந்தார்கள். அல்லாஹ்வின் மீது அதிகம் தவக்குல் வைத்து வந்தார்கள். எளிமையான இயல்புடையவர்களாக இருந்தார்கள்.

அன்னாரின் மிகப் பெரிய சிறந்த குணமாக இருந்தது என்னவென்றால், கடைசி நோய் மிக நீண்ட காலம் நீடித்தது. அன்னார் அதை மிகுந்த பொறுமையுடன் சகித்தார்கள். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் விருப்பத்தில் திருப்தி அடைந்தார்கள்.

மகன் கூறுகின்றார்: அன்னார் இறப்பதற்கு ஒரு நாள் முன்பு அன்னாருக்கு சிகிச்சை அளித்தவர் இவ்வளவு பொறுமையான நபரை நான் என் வாழ்நாளிலேயே பார்த்ததில்லை. ஒருபோதும் எந்த முறையீடும் செய்ததில்லை என்று கூறினார்.

மருத்துவர் குணமாகாது என்று கூறுகிறார் என அன்னாரிடம் கூறியபோது, அன்னார் ஓரளவு சுய நினைவுடன் இருந்தார்கள். பேசவில்லை. ஆனால், கேட்டார்கள். மிகவும் பொறுமையாக அதைக் கேட்டார்கள். மேலும், ஏற்றுக் கொண்டார்கள். மகள் கூறுகின்றார்: தஹஜ்ஜுத் தொழுவதிலும் தஸ்பீஹ் செய்வதிலும் அன்னாருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. எப்பொழுதும் முதலில் காலத்தின் கலீஃபாவுக்காக துஆ செய்து வந்தார்கள். எங்களையும் துஆ செய்யுமாறு அறிவுறுத்தி வந்தார்கள். விவகாரங்களைப் புரியக் கூடியவராக இருந்தார்கள். புத்திக்கூர்மை இருந்தது. மிகவும் அதிகமாக நன்றி செலுத்தக் கூடியவராக இருந்தார்கள். நெருக்கடியையும் கடினத்தையும் கூட புன்னகையுடன் பொறுத்துக் கொண்டு வந்தார்கள். மிகவும் தூய்மையான உள்ளத்திற்கு சொந்தக்காரராக இருந்தார்கள்.

பிறகு, மகன் எழுதுகிறார்: எங்களது சிறந்த ஆசிரியராகவும் இருந்தார்கள். கருணையுள்ள தந்தையாகவும் இருந்தார்கள். அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றக் கூடியவராகவும் சிறந்த ஆலோசனை வழங்கக்கூடியவராகவும் இருந்தார்கள். மிக உறுதியான மனிதராக இருந்தார்கள்.

அல்லாஹ்வின் அருளால் அன்னாரின் பிள்ளைகளும் ஜமாஅத்துடன் நன்றாக இணைந்துள்ளார்கள். அன்னாருடன் எனக்கு பழைய தொடர்புகள் இருந்தன. அன்னாரின் மகன் கூறிய அனைத்துச் சிறப்புகளையும், அன்னாரைப் பற்றி எழுதியுள்ள மற்ற மக்களும் எழுதியுள்ளார்கள்.

அன்னார் உண்மையிலேயே இந்த அனைத்துச் சிறப்புகளுக்கும் சொந்தக்காரராக இருப்பதை நானும் பார்த்துள்ளேன். அல்லாஹ் அன்னாருக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக.

தமிழாக்கம் :

மவ்லவி அதாவுல் முக்னீ


**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

**வல்லமை மிக்க ஏக இறைவனின் இருப்பை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான அமைதி நிலை பெற முடியாது**

**அமைதி நல்கக் கூடியவன் அல்லாஹ் ஆவான் என்ற கொள்கையை இஸ்லாம் மட்டுமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மூலமாக முன்வைத்துள்ளது.**

**ஐரோப்பாவில் வசிப்பவர்களே! நீங்களும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவில் வசிப்பவர்களே! நீங்களும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வசிப்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவி செய்ய மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதையும் காண்கின்றேன். வசிப்பிடங்கள் வெறிச்சோடிக் கிடப்பதையும் காண்கின்றேன்.**
**( ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) )**

**மக்களிடத்தில் உண்மையான சகோதரத்துவம் உருவாகதவரை (உலகில்) அமைதி நிலைபெற முடியாது**
**ஏக இறைவனை ஒப்புக் கொள்ளாத வரை உண்மையான சகோதரத்துவம் உருவாக முடியாது**
**உலகிற்கு கூறுங்கள். இன்று உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு இது மட்டுமே தீர்வாகும்.**
**எனவே வாருங்கள்! அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனை நல்கக்கூடிய அந்த மகத்துவ மிக்க நபருடன் இணைந்து இம்மை மற்றும் மறுமையின் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள் என்று உலகிற்கு கூறுங்கள்.**
**தமது நடத்தையை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொண்டு உலகிற்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அறிவுரை**

**ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்த்திய ஜெர்மன் ஆண்டு மாநாட்டின் நிறைவுரை**

**(21 ஆகஸ்ட், 2022 - ஞாயிற்றுக்கிழமை, அய்வானே மஸ்ரூர், இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட், யூ.கே)**

**சென்ற இதழின் தொடர்ச்சி :**

கலிமாக் கூறக் கூடியவர்கள் கலிமாக கூறக்கூடியவர்களை மார்க்கத்தின் எதிரிகளின் உதவியுடன் கொலை செய்து கொண்டிருக்கின்றனர். இதை விட அதிக துர்பாக்கியம் முஸ்லிம்களுக்கு வேறு என்ன இருக்க முடியும்? மிக அழகிய போதனை மற்றும் மிகவும் வேதனை கொண்ட இறைத் தூதர் (ஸல்) அவர்களை பின்பற்றுவதாக வாதம் செய்தபோதிலும் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி வருகின்றனர். மேலும் உலகில் அமைதியையும், சமாதானத்தையும் பரப்புவதற்கு பகரமாக அமைதியின்மையை பரப்புவதன் அடிப்படையில் அவர்கள் பிரபலமடைந்து கொண்டே வருகின்றனர்.

அமைதி மற்றும் சாந்தியின் அரசராகவும் அல்லாஹ்விற்கு எல்லாரையும் விட மிகவும் அன்பிற்குரியவரின் தொண்டராகவும் அல்லாஹ் இக்காலத்தில் யாரை அனுப்பியுள்ளானோ அவரின் கூற்றைக் கேட்க விரும்பாததன் விளைவாகவே இவை அனைத்தும் நிகழ்கின்றன. அவர்கள் அன்னாரின் கூற்றை கேட்பதை மட்டும் விரும்பவில்லை. இன்னும் கூறப்போனால், அவர்கள் இந்த அளவிற்கு முன்னேறிவிட்டனர். அதாவது, அன்னார் (அலை) மீதும் அன்னாரை ஏற்றுக்கொண்டவர்கள் மீதும் குஃப்ர் (எனும் நிராகரிப்பிற்கான) ஃபத்வாவை வழங்குகின்றனர். மேலும், அவர்களை கொலை செய்வதை இஸ்லாத்திற்கு ஆற்றும் சேவையாகவும், காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மீது செலுத்தும் அன்பின் தரமாகவும் (அந்த முஸ்லிம்கள்) கருதுகின்றனர். அஹ்மதிகளின் வாழ்க்கையோடு விளையாடுவது அவர்களை பொருத்தவரை நற்கூலிக்கான பணியாகும். எனவே அப்படிப்பட்ட மக்கள் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனையை எவ்வாறு உலகில் பரப்ப முடியும்? அந்தோ! அந்த மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமே! அவர்களின் ஆலிம்கள் கெட்ட ஆலிம்களாக ஆகுவதற்கு பகரமாக அறிவையும், புரிதலையும் பரப்பக்கூடிய ஆலிம்களாக ஆக வேண்டும். அப்போதுதான் ஒரே (ஒன்றுபட்ட) சமுதாயமாக திகழ்ந்து இறைத் தூதர் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களின் போதனையை பரப்பக்கூடியவர்களாக ஆகமுடியும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பருடன் இணைந்து உலகிற்கு அமைதி மற்றும் சமாதானத்திற்கான உண்மையான போதனையை எட்டவைக்க முடியும்.

எவ்வாறு இருப்பினும் இது ஒரு தனியான மற்றும் விரிவான கருத்தாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை, அன்னார் (ஸல்) மீது இறங்கிய ஷரீஅத், அமைதி மற்றும் சமாதானத்தை பரப்பக்கூடிய அன்னாரின் போதனை ஆகியவற்றின் அடிப்படையில் தற்போது நான் உலக அமைதி தொடர்பாக சில விஷயங்களை கூறுவேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை மற்றும் அன்னாரின் அழகிய முன்மாதிரி ஆகியவை எந்த அளவிற்கு விரிவான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது என்றால் அதனை முழுமையாக குறுகிய நேரத்தில் எடுத்துரைப்பது சாத்தியமற்றதாகும். ஆயினும், நான் கூறியதுபோன்று சில விஷயங்களை நான் எடுத்துரைப்பேன்.

நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமதித்தல் மற்றும் ஏளனம் செய்தல் ஆகிய குற்றங்களை நாம் இழைப்பதாகவும், அதற்காக போதிப்பதாகவும் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்த நம் மீது பழி சுமத்தப்படுகின்றது. ஆனால், உண்மையில் நாமோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனையின் படி அமல் செய்யக்கூடியவர்களாகவும், அன்னார் (ஸல்) மீது அன்பு செலுத்தக் கூடியவர்களாக இருக்கின்றோம். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நூல்கள் இந்த விஷயத்திற்கு சாட்சியமாக உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான நற்பேறு பெற்ற மக்கள் இந்த போதனை மற்றும் நேசத்தைக் கண்டு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைகின்றனர்.

அந்நியர்களும் இதனை கூறும் நிர்பந்தத்தில் உள்ளனர். அதாவது இஸ்லாத்தின் இந்த போதனையே எப்படிப்பட்ட தாக்கம் நிறைந்த, அன்பு மற்றும் அமைதியை பரப்பக்கூடிய போதனையாக உள்ளதென்றால் இதுவே உலகின் அமைதிக்கான ஒரே தீர்வாகும் என்று அந்நியர்களும் கூறுகின்றனர்.

தற்போது சில நாட்களுக்கு முன்னர் நான் யூ.கே ஆண்டு மாநாட்டில் ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை மற்றும் ஜல்ஸாவின் தாக்கங்கள் தொடர்பான சம்பவங்களில் மக்களின் கருத்துகளை எடுத்துரைத்தேன். அதாவது அஹ்மதிய்யத்தின் சூழல் மற்றும் ஜல்ஸாவின் சூழலால் அந்த மக்கள் எவ்வாறு தாக்கத்திற்குள்ளாகினர். மேலும், இஸ்லாத்தின் அமைதியை விரும்பும் போதனை அவர்களுக்கு அதன் மூலம் எவ்வாறு தெரிய வந்தது போன்ற விஷயங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

எவ்வாறு இருப்பினும், நமது எதிரிகள் என்னவெல்லாம் விரும்புவார்களோ சிந்தித்துக் கொள்ளட்டும்; செய்து கொள்ளட்டும். நமது பணி என்னவென்றால், உங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உண்மையான நேசம் உள்ளதென்றால் பின்னர் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை மேற்கொள்ளுங்கள். மேலும் உலகில் அதனை பரப்புங்கள். இன்று உலகில் அமைதி மற்றும் சமாதானத்திற்கான ஒரே தீர்வு இதுவே ஆகும் என்று உலகிற்கு கூறுங்கள். எனவே வாருங்கள் ! மேலும் அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனைகளை நல்கக்கூடிய அந்த மகத்துவ மிக்க இருப்புடன் இணைந்து இம்மை மற்றும் மறுமையில் உங்களது பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள்.

இவை வெறும் பேச்சுகள் மட்டுமே கிடையாது. மாறாக, நாம் வரலாற்றின் மீது பார்வையை செலுத்தும்போது நாம் இந்த விஷயத்தை பார்க்கின்றோம். அதாவது, படிப்பறிவு அற்ற மற்றும் அறிவீனமான அரேபியர்களை அந்த நபி அறிவீனத்தின் இருளிலிருந்து எவ்வாறு வெளியேற்றி உயர் நல்லொழுக்கம், அறிவு மற்றும் ஞானம் எனும் உயரிய மினாராக்களில் எட்டச் செய்தார் என்பதை நம்மால் வரலாற்றில் காணமுடிகிறது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 13 April 2023 Issue No. 15

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அந்த தூதரே காட்டுமிராண்டிகளை மனிதர்களாக்கினார். மேலும் மனிதனின் நிலையிலிருந்து நல்லொழுக்கம் கொண்ட மனிதராக்கினார். அதாவது உண்மையான மற்றும் சரியான ஒழுக்கத்தின் மையப் புள்ளியில் நிலைநாட்டினார். மேலும், பின்னர் நல்லொழுக்கம் கொண்ட மனிதன் என்ற நிலையிலிருந்து இறையடியாராக திகழும் வகையில் இறைவனின் பண்புகளை மேற்கொள்ளச் செய்தார்.

(மஜ்மூஆஃ இஷ்திஹாராத், தொகுதி 2, பக்கம் 183, பதிப்பு- நஷ்ரோ இஷாஅத் காதியான், 2019)

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கும், தம் மீது அன்பு கொள்ளக்கூடியவர்களுக்கும் ஒழுக்கம் மற்றும் இறைவணக்கங்களுக்கான எப்படிப்பட்ட வழிமுறைகளை கற்றுக் கொடுத்தார்கள் என்றால் அவை அந்த மக்களை இறை நெருக்கத்தை பெறக்கூடியவர்களாக ஆக்கிவிட்டது. மேலும், அவர்களின் ஒவ்வொரு சொல்லும், செயலும் இறைவனின் திருப்திக்கானதாக அமைந்துவிட்டது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவதால் அது மனிதனை எந்த அந்தஸ்திற்கு கொண்டு சென்று விடுகின்றது என்றால், அந்த அந்தஸ்தை அடைந்து அந்த நபர் அல்லாஹ்வுடன் உண்மையான நேசம் கொள்ளக்கூடியவராக ஆகிவிடுகின்றார். மேலும் அந்த உண்மையான நேசம் பின்னர் மனிதனை தனது ஒவ்வொரு கூற்றாலும், செயலாலும் இறை திருப்தியை பெறக் கூடியவராக ஆக்கிவிடுகின்றது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றக் கூடியவர்களைக் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையான உள்ளத்துடன் பின்பற்றுவதும், அன்னார் (ஸல்) மீது அன்பு கொள்வதும் இறுதியில் மனிதனை இறைவனின் அன்பிற்குரியவராக ஆக்கிவிடுகின்றது.

(ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானி கஸாயீன், தொகுதி 22, பக்கம் 67)

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் உள்ளங்களில் உருவாக்கிய புரட்சி இதுவாகவே இருந்தது. அதாவது இணைவைப்பாளர்களாக இருந்தவர்கள் ஏகத்துவவாதிகளாக ஆகிவிட்டனர். மேலும் அவர்கள் எப்படிப்பட்ட ஏகத்துவ வாதிகளாக ஆகிவிட்டனர் என்றால், இறைவன் அவர்களுடன் அன்பு செலுத்தக்கூடியவனாக ஆக்கிவிட்டான். அல்லாஹ்விடம் அன்பு செலுத்தக்கூடியவர்கள் இறைவணக்கத்திற்கான உரிமையையும் வழங்கினார்கள். மேலும் சிறப்பாக நிறைவேற்றினார்கள். அல்லாஹ்வால் வழங்கப்பட்ட போதனையின்படி அமல் செய்யத் தொடங்கிவிட்டனர். மேலும் சிறப்பாக அமல் செய்தனர். மேலும், அதன் தரத்தை நிலைநாட்டினார்கள்.

ஒருவர் மீது அன்பு கொள்ளப்படும்போது பின்னர் அவரது ஒவ்வொரு சொல்லின்படியும், செயலின்படியும் அமல் செய்வதற்கு மனிதன் முயற்சி செய்கின்றான். அவரது ஒவ்வொரு கூற்றையும் கேட்பதற்கும், அதனை ஒப்புக் கொள்வதற்கும் முயற்சி செய்கின்றான். வெறும் நாவளவிலான வாதம் செய்வதில்லை. ஆக, அந்த மக்களிடத்தில் இறைவன் மீதான நேசம் உருவானபோது இறைப் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலத்துவதன் பக்கமும் அவர்களிடம் கவனம் உருவானது. அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதிலும் ஒருவர் மற்றவரை விட முன்னேறிச் செல்வதிலும் முயற்சி செய்யக்கூடியவர்களாக ஆகிவிட்டனர். மேலும், இப்படிப்பட்ட நிலைமை உருவாகிவிட்டபோது பின்னர் ஒருவர் மற்றவருக்கிடையிலான அன்பும், நேசமும் உருவாகிவிடும். மற்றவர்களுக்குரிய உரிமையையும் இறை திருப்தியை பெறுவதற்காக மனிதன் செலுத்துகின்றான். இந்த தரம் நிலைநாட்டப்படும்போது பின்னர் அமைதி மற்றும் சமாதானத்திற்கான அடித்தளம் அமைந்துவிடுகின்றது. அதற்காக முயற்சிகளும் நடைபெறும். மேலும், அதன் தரம் நிலைநாட்டப்படுகின்றது.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்படிப்பட்ட இருப்பு என்றால் அன்னார் (ஸல்) நமக்கு இறைவனை சந்திப்பதற்கான வழிகளை காட்டினார்கள். மேலும், அந்த இருப்பின் மீது இறங்கியுள்ள போதனையின்படி அமல் செய்தால்தான் நம்மால் உலகில் அமைதி மற்றும் சமாதானத்தை உருவாக்க முடியும்.

எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, அமைதிக்கான அடித்தளம் வீடுகளிலிருந்து தொடங்குகின்றது. பின்னர் வீதிகள், கிராமங்கள், நகரம், நாடு மற்றும் உலகளாவிய மட்டம் வரை அதன் வட்டம் அதிகரித்துவிடுகின்றது. எனவே எல்லா மட்டத்திலும் ஒருவர் மற்றவரின் உணர்வுகளையும், உரிமைகளையும் கருத்தில் கொள்ளப்படும்போது தான் அமைதி நிலைபெற முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக எல்லா தரப்பினருக்கும் அல்லாஹ் இந்த போதனையையே வழங்கியுள்ளான். எல்லா தரப்பினருக்கும் இந்த போதனையை அன்னார் (ஸல்) வழங்கினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த தலைப்பை பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்து வந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், உலக அமைதியும் என்ற கருத்தை எடுத்துக் கூறினார்கள்.

அன்னாரின் அந்தக் கருத்திலிருந்து பயனடைந்தவாறும் அது தொடர்பாக சில விஷயங்களை எடுத்துரைப்பேன்.

அமைதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்பதை நாம் பார்க்கின்றோம். புரிகின்றோம். அமைதிக்கான விஷயங்கள் பேசப்படுகின்றன. அமைதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் ஆகும் என்று ஒவ்வொருவரும் கூறுகின்றார். மேலும் அமைதியின் நிலையில்தான் குடும்பத்தின் நிம்மதி மற்றும் சமாதானத்திற்கான உத்திரவாமும் உள்ளது. மேலும் அது உலகளாவிய மட்டத்திலும் அமைதி மற்றும் சமாதானத்திற்கான உத்திரவாதம் ஆகும். எல்லா மட்டத்திலும் அமைதி நிலைபெற வேண்டும் என்று விருப்பமும் கொள்கின்றனர். ஆனால், விருப்பம் கொள்வதால் மட்டும் அமைதி உருவாகி விட முடியாது. ஏனெனில், இங்கும் அமைதிக்கான விருப்பம் என்பது சுயநலம் கொண்டதாக இருக்கின்றது. உலகில் நாம் இதையே பார்க்கின்றோம்.

தமிழாக்கம் : மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்

---

தொடர்ச்சி……அடுத்த இதழில்

* * * * *

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad